Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை




மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 20 சனிக்கிழமை (06.10.2012) பக்கங்கள் 20 ஓசை - 006



அரசியல் தீர்வும் தமிழ் சமூகமும்

05

விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை



06

இரசிகர்களைக் கவராத ஆட்டம்



08



சூட்சும வெளிப்பாடுகள் மெய்தான்...

13




நம்மில் இருந்து ஒரு துளி

10

# கோர விபத்து மூவர் பலி

## இருபாலையில் பயங்கரம்



(யாழ்ப்பாணம்)

இருபாலையில் உள்ள பருத்தித்துறை வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்ததுடன், பத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி வீதியில் உள்ள கற்பகப்பிள்ளையார் கோவில் முன்பாக இடம்பெற்ற இந்தக் கோரவிபத்தில் தனியார் மினிபஸ் ஒன்றும் தென்பகுதி சுற்றுலா பயணிகள் பஸ் ஒன்றும் சிக்கிச் சிதைவடைந்தன.

இந்த இரு பஸ் வண்டிகளினதும் சாரதிகள் உட்பட மூவர் மரணமடைந்துள்ளனர். மேலும் சிலர் மிகவும் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா மருத்துவ மனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். உடுப்பிட்டியைச் சேர்ந்த அன்னலிங்கம் அமிர்தராசா (வயது-34)

19 ஆம் பக்கம் பார்க்க

## 'திவிநெகும' தடைகளைத் தாண்டி அமுலாகும்

(கொழும்பு)

அனைத்து தடைகளையும் தாண்டி திட்டமிட்டபடி திவிநெகும சட்டம் அமுல்படுத்தப்படும். எக்காரணம் கொண்டும் திவிநெகும சட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீளப்பெற்றுக்கொள்ளப்போவதில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய கடல் பாதுகாப்பு மாநாடு

(டில்லி)

இலங்கை-இந்திய கடற்பரப்பினூடாக சட்டவிரோத ஆட்கடத்தல்களை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்குடன் கரையோரப் பாதுகாப்பு தொடர்பான மாநாடு புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளது.

18 நாடுகள் பங்கு கொண்டுள்ள இந்த மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் இலங்கையை பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ. கே. அந்தோணி கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இந்தியா, இலங்கையுடன் இணைந்து செயற்படும் என குறிப்பிட்டார்.

ஆயுதக் கடத்தல், ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் உள்ளிட்ட பல்வேறுப்பட்ட நடவடிக்கைகள் இன்று இந்து சமுத்திர கடற்பரப்பு ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நடவடிக்கையானது இரண்டு நாடுகளினதும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் அமை

19 ஆம் பக்கம் பார்க்க

## முற்றுகிறது காணித்தகராறு பிரதேசசபைக்கு தலையிடி

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த ஐந்தரைப் பரப்புக் காணியை இராணுவம் பலாத்காரமாக எடுத்துக் கொண்டதாக சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

இக்காணி சபைக்கே சொந்தமானது எனவும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபையினால் நல்லூர் பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டதாகவும், 15.12.2003 இல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இக்காணிக்குள் கட்டடம் கட்டுவதற்கு பிரதேச சபையிடம் அனுமதி கேட்டதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் மேற்படி காணி இருந்த பகுதிக்கு வந்த ஐந்து இராணுவத்தினர் அங்கு காவற்கடமையிலிருந்த சபையின் காவலாளியை வெளியேற்றிவிட்டு, நான்கு பக்கமும் மதிலால் சூழப்பட்டு வெளிப்பக்க 'கேற்' போடப்பட்டிருந்த காணியின்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனோர் விவகாரம் காத்திரமான நடவடிக்கை தேவை

(ஜெனிவா)

யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

யுத்த காலத்தில் காணாமல் போன சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் தொடர்பில் அரசு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கேள்வி எழுப்பியுள்ளார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.



வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை அமர்வுக்கு முன்னர் இதற்கான விளக்கத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என நவநீதம்பிள்ளை கேட்டுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன. இந்த விடயம் தொடர்பில் அவர் ஜெனிவாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார், இலங்கையில் சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

19 ஆம் பக்கம் பார்க்க

## நோர்வே மீது கண்டனம் கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

நோர்வேயில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சிறுவர்களை நலன்புரி மையங்களில் அனுமதிக்கப்படாமைக்கு கண்டனம் தெரிவித்து கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்னால் அமைதிப் போராட்டம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

அதேவேளை, ஒரே கட்டிலில் பிள்ளைகளுடன் பெற்றோர் உறங்குவதனாலும், கைகளினால் பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுவதனாலும் பிள்ளைகளை நோர்வே அரசாங்கம் பலவந்

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை விவசாயிகளுக்கு சர்வோதயம் உதவி

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் 540 குடும்பங்களுக்கு சர்வோதயம் நிறுவனம் விவசாயச் செய்கைக்கான உதவி வழங்கிவருகின்றது. இக்குடும்பங்களுக்கு கடன் அடிப்படையில் 30 ஆயிரம் ரூபா வீதம் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்த வட்டிவீதத்தில் இக்கடன்கள் வழங்கப்படுகின்றது. விவசாயிகள் பணமாகவோ விவசாய உள்ளீடுகளான கச்சான், கடலை, உழுந்து, பயறு போன்ற உள்ளீடுகளாகவோ பெற்றுக்கொள்ள முடியும். (கே)




## அறிவித்தல்

## யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி

## உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

## ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துதல்

யாழ். குடாநாட்டின் வாடகைச் சேவையிலீடுபடும் சகல ஓட்டோக்களும் கட்டண அறவீட்டு மீற்றர் பொருத்தலும், சாரதிகள் சீருடை அணிதலும் அவசியமாக்கப் பட்டுள்ளது. எனவே இதற்கு முதற்கட்டமாக மீற்றர் பொருத்துவதற்கு பேர்ள் நிறுவனம் ஒன்றுடன் நாம் ஒப்பந்தம் செய்துள்ளோம். இதனூடாக தலைமைச் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிளைச்சங்க உறுப்பினர்களுக்கும் மீற்றர்கள் பொருத்த இன்று ஏற்பாடு செய்துள்ளோம். ரொக்கப் பணம் மற்றும் இலகு கடன் அடிப்படையிலும் எமது அனுமதியுடன் பொருத்தப்படவுள்ளதால், ஓட்டோ உரிமையாளர்கள் தலைமைச் சங்கத்திலும், கிளைச் சங்கம் ஊடாகவும், எம்முடன் தொடர்புகொண்டு மீற்றர் பொருத்தும் செயற்பாட்டைத் தொடருமாறு அறியத் தருகின்றோம். எமது சங்கத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையும் பெற்றுக்கொள்ளவும்.

மேலும் வாடகைச் சேவையிலீடுபடும் சகல ஓட்டோ உரிமையாளர்களும் தமது பகுதிக்குரிய கிளைச் சங்கங்களிலும் பதிவுசெய்து அவர்களூடாக எம்முடன் தொடர்புகொள்ள வேண்டும்.

யாழ். குடாநாட்டில் தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள ஓட்டோக்களுக்கு சேவைக் கட்டணமாக ஆரம்பிக்கும் முதலாவது ஒரு கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும் பின்பு தொடரும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கு 40 ரூபா வீதமும் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. (காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை) தீவகத்திற்கு கட்டண வித்தியாசம் உண்டு. இவ்வாறு ஓட்டோ சேவையை ஒழுங்கமைத்து பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஓட்டோ உரிமையாளர்களுக்கும் பயன்தரும் வகையில் கடந்த 12.09.2012 இல் மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் கௌரவ அரச அதிபர், கௌரவ மாநகர முதல்வர், யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி சமன்சிகேரா மற்றும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி அவர்களும் கலந்துகொண்ட ஓட்டோ உரிமையாளருக்கான கூட்டத்தில் இவ்விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

எனவே இதனை அனுசரித்து ஓட்டோ சேவையாளர்கள் கட்டுக்கோப்பான சேவையை மேற்கொள்ளுமாறும் அறியத்தருகின்றோம்.

இன்று (06.10.2012) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் எமது சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ஓட்டோவிற்கு மீற்றர் பொருத்தி ஆரம்பித்து வைக்கப்படும்.

தீவகம் உட்பட சகல கிளைச் சங்கங்களும் உடன் தொடர்புகொள்ளவும்.

**முனீஸ்வரன் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C/2041) **நிர்வாகம்**



## வலி. தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப்பந்தக்காரர்களிடம் அறிவுறுத்தலிலுள்ள வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 06.10.2012 - 18.10.2012 பி.ப. 2.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 19.10.2012 நண்பகல் 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி - 19.10.2012 முற்பகல் 3.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகம்ளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
05. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய். என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
06. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து இருமாத காலத்திற்குள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
07. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிப்பு) | கேள்விப் பத்திரக் கட்டணம் | Vat |
|---|---|---|---|---|---|
| 01 | இளவாலை மாரீசன்கூடல் வீதி திருத்தம் | C8 | 20400.00 | 1000.00 | 142.40 |
| 02 | மானிப்பாய் ஆனந்தவைரவர் வீதி திருத்தம் | C8 | 6700.00 | 1000.00 | 142.40 |
| 03 | காடாப்புலம் பகுதியில் தொடர் சுற்றுமதில் புனரமைப்பு | C8 | 2500.00 | 1000.00 | 142.40 |
| 04 | மாதகல் போதிமயான எரிகொட்டகை அமைத்தல் | C8 | 5000.00 | 1000.00 | 142.40 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (C/2040) 04.10.2012.


## ஆரோக்கிய சமூகத்தின் சிற்பிகள்; ஆசிரியர்களுக்கு புகழ்மாலை



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்காக தம்மை அர்ப்பணித்து செயலாற்றும் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்களென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சென்.பெனடிக்ற் றோ.க.த வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஞானதர்சினி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்களுக்கான கல்வியறிவை போதிப்பது மட்டுமல்லாமல் சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். கல்வியறிவு நற்பண்புகள் கொண்ட சமூக உருவாக்கத்தில் முன்னின்று உழைக்கும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நாள் இன்றாகும் இந்நாளில் ஆசிரியர்களை கௌரவப்படுத்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆற்றலும் ஆளுமையும் மிக்க நற்சமூகத்தை உருவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரித்தானது. இச்சமூகப் பொறுப்பை நன்குணர்ந்து செயலாற்றுவதன் மூலமே நற்பண்புகளைக் கொண்ட சமூகமாக எமது சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், ஆசிரியர்கள் கௌரவிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பரிசில்களை வழங்கி வைத்தார்.

## வாரத்தில் ஒருநாள் மட்டும் மனித உரிமைகள் அலுவலகம்

### கிளிநொச்சி மக்களுக்கு சேவை

(யாழ்ப்பாணம்)

வாரத்தில் புதன்கிழமை தோறும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கிளிநொச்சிப் பணிமனையில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்துகொள்வதுடன், மனித உரிமை ஆணைக்குழுவின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அதன் யாழ். காரியாலய இணைப்பாளர், ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலயமொன்று கடந்த புதன்கிழமை முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரில் பிராந்திய சுகாதார நிலையம் அமைந்திருக்கும் பகுதியில் இயங்கிவருகின்றது. இந்தக் காரியாலயத்திற்கு வாரத்தில் புதன்கிழமை தோறும் யாழ். மனித உரிமை ஆணைக்குழு காரியாலயத்தில் இருந்து செல்லும் அதிகாரி ரி.கனகராஜ் மற்றும் அலுவலர்கள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை தங்கியிருந்து சேவையாற்றவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மனித உரிமை வேலைத்திட்டங்களும் கிளிநொச்சிக் காரியாலயத்தின் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இவ்விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பணிப்புலம் கலட்டிப் பகுதியில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தூக்கு மாட்டி இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைசேர்ந்த அற்புதராசா யோகநாதன் (வயது-51) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் இளவாலைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் ஒப்படைக்கப்பட்டது. (பா)

## மீண்டும் நியமனம்

(கிளிநொச்சி)

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தால் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் கு.தவசோதி நேற்றுமுதல் மீண்டும் கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் இவர் திடீரென வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரின் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து இவர் நேற்று முதல் கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். (கே)

# விசா வழங்கும் நிறுவனங்கள் நேர்மையுடன் செயற்பட வேண்டும்

## – திசைகாட்டி நிறுவன பதில் நிர்வாக இயக்குநர் –

(யாழ்ப்பாணம்)

விசா ஆலோசனை வழங்க ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் என்றாலே மோசடிக்காரர்களின் கூடாரம் என்ற மனநிலை மக்களிடையே காணப்படுகிறது. ஒரு சிலரின் மோசடியான செயற்பாடுகளினால் எல்ல நிறுவனங்களுக்குமே இந்த அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த அவப்பெயரை மாற்றி மக்களிடத்தில் நன்மதிப்பைப் பெறுவதற்கு இந்த நிறுவனங்கள் முயற்சிக்க வேண்டும் என திசைகாட்டி விசா ஆலோசனை நிறுவனத்தின் பதில் நிர்வாக இயக்குநரும் பட்டயக் கணக்காளருமான எஸ். செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிறநாட்டுப் பயணத்திற்கென பணத்தினை தம்மிடம் வழங்கி பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தால் பயணத்தை இரத்துச் செய்த எஸ்.சுபராஜ் குடும்பத்தினருக்கு பணத்தினை மீள வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய இளம் சந்ததியினர் தொழில் மற்றும் உயர் கல்வி போன்றவற்றுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முயற்சிக்கின்றார்கள்.

இவற்றைப் பயன்படுத்தி சில நிறுவனங்கள் அவர்களிடம் பொய் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி இலட்சக்கணக்கான பணத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் வழங்கிய வாக்குறுதியின்படி செயற்படுவதில்லை.

வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடாதவிடத்து இந்த நிறுவனங்கள் பெற்றுக் கொண்ட பணத்தினை மீளளிப்பதில்லை. அப்படி வழங்கினாலும் பெற்றுக் கொண்ட பணத்தின் சொற்ப அளவினையே வழங்குகின்றனர். இவ்வாறு பணத்தை இழந்த பலர் தற்கொலை கூட செய்துள்ளனர்.

எனவே மேற்படி நிறுவனங்கள் தமது மோசடியைக் கைவிட்டு நேர்மையாகச் செயற்பட்டு சமூகத்திற்கும், நாட்டுக்கும் பெருமை தரும் வகையில் செயற்பட வேண்டும் என்றார். (54)



பாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. அண்மையில் சுண்டிக்குளம் பிளேப்பிக் லேன் திருத்தியமைக்கப்பட்ட போது ஈ.பி.டி.பி.யின் பாழ்.நகர அமைப்பாளர் றீகன் நேரில் சென்று புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார்.

(படம் : ஆர்.ராஜகுமார்)

# கடல் ஆமை பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் கடற்பகுதியில் கடற்தொழிலாளி ஒருவரினால் பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்ட கடல் ஆமை ஒன்று ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின் பேரில் ஊர்காவற்றுறைக் கடலில் நேற்று முன்தினம் விடப்பட்டடுள்ளது.

கடந்த புதன்கிழமை கடல் ஆமை ஒன்றினை கடற்தொழில் ஈடுபட்டிருந்த குறிகாட்டுவான் கடறதொழிலாளி ஒருவர் பிடித்து வந்து கரையில் வைத்திருந்த சமயம், தகவலறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் அவரைக் கைது செய்ததுடன் கடல் ஆமையையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் குறித்த கடற்தொழிலாளியையும் கடல் ஆமையையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பாரப்படுத்தினர்.

இந்நிலையில் குறித்த கடல் ஆமையினைப்பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் கடலாமையை கடலில் விடுமாறு உத்தரவிட்டதனை அடுத்து அது ஊர்காவற்றுறைக் கடலில் விடப்பட்டுள்ளது. அத்துடன் ஆமையைப்பிடித்தவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கையில் கடல் ஆமை பிடிப்பது கடற்தொழில் நீரியல் வள அமைப்பினால் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதோடு தண்டனைக்குரிய குற்றம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(பா)

# துவிச்சக்கர வண்டி விநியோகம்

(கைதடி)

தென்மராட்சியில் உள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டது.

வறுமையில் வாழும் சிறுவர்கள், சிறுவர் இல்லங்களில் அனுமதி கோரிச்செல்வதைத் தவிர்க்கும் முகமாக இந்த உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் 34 மாணவர்களுக்கு மேற்படி முதற்கட்ட உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கான வைபவம் கடந்த முதலாம் திகதி கைதடி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது. (80)

# வெள்ளத்தில் மிதக்கும் பேருந்து தரிப்பிடம்

(சுன்னாகம்)

மல்லாகம் சந்திப்பகுதியில் மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இங்கு வரும பயணிகள் வெள்ளத்தினூடாகவே செல்ல வேண்டியநிலை காணப்படுகிறது. எனினும் இவற்றை சீர் செய்யுமாறு உரியவர்களிடம் கோரியும் பல தடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து காலை வேளையில் பல நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் எனப் பலரும் பயணம் செய்யும் நிலையில், இப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வாகனங்கள் செல்லும் போது வெள்ளநீர் வீசுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றமை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை; இவ்வாறு தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் உயிர்க்கொல்லியான டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (148)

# சித்திரப் போட்டி

(வரணி)

வடவரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடந்த 1 ஆம் திகதி சிறுவர் தின நிகழ்வு, கொடிகாமம் பொலிஸாரின் ஏற்பாட்டில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு பொலிஸாரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், மதிய உணவும் வழங்கப்பட்டது.

அத்துடன் விசேடமாக பொலிஸாரால் மாணவர்களிடையே சித்திரப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளது இதில், ற.துளசிகா (தரம் 03), அ.அன்பரசன் (தரம் - 04), பா.வினோச் (தரம் 05) ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்றனர். இவரகளுக்கு பரிசுப் பொருட்களும் பொலிஸாரால் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது. (150)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் புரட்டாதி மாத மலர் வெளிவந்துள்ளது.

இம்மலர் பல்வேறு ஆன்மீக தகவல்களை தாங்கி வெளிவந்துள்ளது.

# உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்த 13 குடும்பங்கள் முல்லையில் மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த 13 குடும்பங்கள் அண்மையில் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

குறித்த பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு செம்மலை மகா வித்தியாலயத்தில் குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சொந்த இடத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதன்படி கொக்கிளாய் கிழக்கில் ஒரு குடும்பமும், கொககிளாய் மேற்கில் 4 குடும்பங்களும், கொக்குத்தொடுவாய் வடக்கில் 4 குடும்பங்களும், கொக்குத்தொடுவாய் மத்தியில் 4 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக கரைதுறைப் பற்று பிரதேச செயலக தகவல்கள் தெரிவித்துள்ளன. (04)







யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 20 ஆவது மாணவர் படையணியின் மேலைத்தேய பான்ட் வாத்திய பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அணிவகுப்பினைப் பார்வையிடுவதனையும், வரவேற்பு நடனமாடும் வேம்படி மகளீர் கல்லூரி மாணவிகளையும், இப்பயிற்சிப்பட்டறையில் பங்கு கொள்ள வந்த பாடசாலை பான்ட் வாத்திய குழுவினர் அணிவகுத்து நிற்பதனையும் காணலாம்.

(படங்கள் : ஆர்.ராஜகுமார்)

எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.

- ஜேம்ஸ் ஆலன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நாம் விழுங்கும் உணவே நாம்!

எப்படி கண் உள்ளவர்களை எல்லாம் சரியான பார்வையுடையவர்கள் என்று கூறிவிட முடியாதோ அவ்வாறே நாம் பார்க்கும் பார்வைதான் ஒரேயொரு சரியானது என்றும் சொல்ல முடியாது. நரம்பியல் வல்லுனர் ஒலிவர் சேக்ஸ் என்பவர் சில முதியவர்கள் பிறவியிலேயே கண்பார்வையற்றவர்களாக இருந்து பின்பு பார்வை பெற்ற அனுபவத்தை தனது நூலொன்றில் விவரித்திருக்கிறார்.

அது நாம் திரைப்படங்களில் புதிதாகப் பார்வை பெற்றவர், "டாக்டர் இப்போது உங்களை என்னால் தெளிவாகப் பார்க்க முடிகிறது" என்று சொல்லி உணர்ச்சிவசப்படுவது போல அவ்வளவு எளிமையான விஷயமல்ல என்று தெரிகிறது. நமது திரைப்படங்களில் இத்தகைய அனுபவங்களைக் காண்பிக்கும்போது முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பவர் உடனடியாக அனைத்தையும் காண்பது போல சித்தரிக்கப்படுவது உண்மையில் சரியானதல்ல என்கிறார் அவர்.

உண்மையில் பிறவியிலேயே பார்வையில்லாத சிலருக்கு அறுவை சிகிச்சை மூலம் பார்வைத்திறனை அளித்தனர். அப்போது அவர்களால் தம்மைச் சுற்றியுள்ள பொருட்களையும், காட்சிகளையும் தொடர்புபடுத்திப் பார்க்க முடியவில்லை என்பதையே அறிந்துகொள்ள முடிந்தது.

புலனுணர்வு என்பது தனிமையில் நடக்காது. செயல்பாடுகள், இயக்கம், புற உலகுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு போன்றவற்றை ஒருங்கிணைந்து புரிந்துகொள்ளப் பழகும் போதுதான் கண்களால் பார்க்கும் திறன் இருந்தாலும் அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் கிடைக்கும்.

பார்த்தல் என்பது பொருளை இனங்கண்டுகொள்ள உதவாது. உண்மையில் நாம் எமது கண்களால் பார்த்தல் என்பது தொடர்புபடுத்திக் காணுதல் என்பதே. இந்த தொடர்புபடுத்திக் காணுதல் என்பது கற்றல் அனுபவத்தின் வாயிலாக நமக்கு ஏற்பட்டு வருவதே.

நமக்குப் பார்க்கும் ஆற்றல் உண்டு. ஆனால் குழந்தைப் பருவத்தில் எதையும் அறிந்து கொள்ளும் நோக்கில் ஒருவித வியப்புடன் பார்க்கத் தொடங்கும் கண்கள் நாளடைவில் சிலவற்றை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றன. பெரும்பாலானவற்றைப் பார்ப்பதில்லை அல்லது பார்க்க விரும்புவதில்லை. இதனால் கண் இருந்தாலும் குருடாக, காதிருந்தும் செவிடாக என்று கூறும் வகையில் அவரவராகவே கண்களுக்குத் திரையிட்டுக் கொள்கின்ற்ன்ர்.

இந்தத் திரையிடலை ஊடகங்கள் மிகக் கவனமுடனும் ஊக்கமுடனும் செய்துவருகின்றன. உதாரணத்திற்கு வெள்ளையர்கள் மிகவும் நாகரினமானவர்கள் நாசூக்கானவர்கள் என்பது போலவும், கறுப்பர்கள் என்றால் அசுத்தமும் காட்டுமிராண்டித் தனமுமாக ஒரு சிந்தனை நமக்குள் வருகிறதென்றால், அது இவ்வாறு ஊடகங்களால் கட்டப்பட்டதே. நம் நேரடிப் பரிச்சயத்திற்குள் வராத மனிதர்கள் பற்றியெல்லாம் நமக்கிருக்கும் எண்ணங்கள் பார்வைகள் இவ்வாறு யார் யாரோ வெவ்வேறு காரணங்களுக்காகக் கட்டமைத்து விட்டவையே. அவற்றையெல்லாம் நாம் நிச்சயமாக மறுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

ஒரு மனிதனின் சிந்தனைத் தளத்தில் ஊடுருவி அவன் எதைச் செய்ய வேண்டும், எதைச் சார்ந்திருக்க வேண்டும், எதைச் சாப்பிட வேண்டும் எதை உடுக்கவேண்டும், எதைக் குடிக்கவேண்டும், எதைப் படிக்க வேண்டும், எதைப் பார்க்க வேண்டும் எதை வாங்க வேண்டும், எப்படிச் சிந்திக்க வேண்டும் என்ற அவனது அனைத்துச் செயற்பாடுகளையும் அவனையறியாமலோ அல்லது அவன் அறியும்படியாகவோ புறநிலையில் இருந்து இயக்குகின்ற தீர்மானகரமான சக்தியாக ஊடகங்களே விளங்குகின்றன.

எனவேதான் மக்களுக்கு முதலில் இந்த ஊடகங்களிடமிருந்து சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப்பட வேண்டும். ஊடகங்களைச் சார்ந்து இயங்குவோரிடமும் நுகரும் மக்களிடமும் தொடர்ந்த விழிப்பூட்டலுக்கும் அவதானப்படுத்துதலுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிஞர் குரல்கள் எழுகின்றன.

- ஆசிரியர்

## தாய், சேய் மரணம் குறித்து ஆராய வருகின்றது குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் தாய், சேய் மரணம் குறித்து ஆராய்வதற்காக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.போதனாவைத்தியசாலைக்கு விஜயம் செய்து ஆய்வில் ஈடுபடவுள்ளது.

அண்மைக்காலமாக யாழ். போதனாவைத்தியசாலையில் தாய், சேய் மரண வீதம் அதிகரித் திருப்பதன் பின்னணியிலேயே சுகாதார அமைச்சு அதிகாரிகளின் விஜயம் அமையஉள்ளதாகவும் இதற்கான காரணங்களைக் கண்டறிவதே இந்த அதிகாரிகள் குழுவின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ். போதனாவைத்தியசாலையில் ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய நான்கு மாடிக்கட்டடத்திறப்பு விழா நிகழ்வு குறித்த ஒழுங்குபடுத்தல் குறித்தும் இந்தக் குழுவினர் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நான்கு மாடிக்கட்டடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டவுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலைத்தகவல் மேலும் தெரிவித்துள்ளது. (பா)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(அச்சுவேலி)

யாழ். எயிட் நிறுவனத்தினால் மாணவர்களின் எதிர்கால கற்றல் செயற்பாடுகளை மேம்பாடடையச் செய்யும் வகையில் புத்தூர்- வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலையில் கல்வி பயின்று வரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே அவர்களின் எதிர்கால கற்றல் செயற்பாடுகள் இடையூறின்றி தொடர்ந்து செல்வதற்காகவும், அவர்களை மென்மேலும் கற்றலில் ஊக்கப்படுத்துவதற்காகவும் இவ்வாறான கற்றல் உபகரணங்கள் யாழ். எயிட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாணவர்களுக்கான காலணிகள், புத்தகப்பைகள், பயிற்சிக் கொப்பிகள் அடங்கிய பொதி போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் இந்நிறுவனத்தின் இச் செயற்பாடு காரணமாக சுமார் 100 மாணவர்கள் வரை பெரும் பயன் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## சட்டவிரோத அவுஸ்ரேலிய பயணம் வட, கிழக்கு வாசிகளே அதிகம்

புகலிடக் கோரிக்கையாளர்களைச் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பிவைக்கும் நபர்களுக்கு எதிராக தொடர்ந்தும் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்த இரண்டாயிரத்து 300இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஆட்கடத்தலில் ஈடுபடும் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பலர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு செல்ல முற்பட்டபோது நீர்கொழும்பு எத்துகால் பகுதியில் கைது செய்யப்பட்ட ஆறு பேர் மற்றும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு 59 பொலிஸார் கைது

(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் பொலிஸாருக்கு எதிராக 500 இற்கும் மேற்பட்ட இலஞ்ச வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதாக கூறப்படுவதை பொலிஸ் தலை மையகம் நிராகரித்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் 59 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பொலிஸாருக்கு எதிராக அதிகளவில் பால் சார்ந்த இலஞ்ச குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே இலஞ்சம் கோரியதாக கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டது.

இவ்வாறான தரவுகள் எங்கிருந்து கிடைத்தன என்பதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு என பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

எம்மிடம் உள்ள தரவுகளுக்கும் பத்திரிகைகளில் வழங்கப்படும் தரவுகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## கைத்தொலைபேசி சுத்தத்தால் மைற்றா பரவுவதை தடுக்கலாம்

### வைத்திய கலாநிதி அனில் சமரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

காதில் தொடர்ச்சியான அரிப்போ அல்லது செவிப்புலன் குறைபாடோ இருந்தால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ள பொரளை மருத்துவ பரிசோதனை நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையர் ஒருவரின் காதில இருந்து மைற்றாக்கள் கண்டு பிடிக்கபட்டதைத் தொடர்ந்து தற்போது தாய்வான் பிரஜை ஒருவரின் காதிலிருந்தும் "மைற்றாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளதென நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளில் இருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் மைற்றாக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வயோதிபர்கள் மற்றும் உடற்தூய்மை குறித்து அதிகம் கவனம் செலுத்தாதவர்களின் காதுகளில் மைற்றாக்கள் பரவுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக தொடர்ச்சியாக காதுகளில் உபாதை அல்லது செவிப்புலன் குறைபாடுகள் இருந்தால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என பொரளை மருத்துவ பரிசோதனை நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இதன்போது மைற்றாக்கள் பரவியமைக்கான அறிகுறி கண்டறியப்பட்டால் தமது நிலையத்திற்கு தகவல் அனுப்பிவைக்கப்படும் என வைத்தியகலாநிதி அனில் சமரநாயக்க கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக சுமார் 200 கையடக்கத் தொலைபேசிகளில் மைற்றாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் உரியதரத்துடன் சுத்தமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசப்பற்றும் பன்முக சிந்தனையும் அரசியல் தீர்வும் தமிழ் சமூகமும்

## தேவன் கட்டுரையிலிருந்து

தேசிய இன முரண்பாட்டின் வரலாறு எவ்வாறு இருப்பினும், கடந்த 30 வருடத்துக்கு மேலான போரில் ஏற்பட்ட பல பில்லியன் சொத்து இழப்புகள், உயிர் இழப்புகள், தலைமுறை இழப்பு போன்றவைகளை கவனத்தில் எடுக்கும்போது, இனப்பூசலுக்கு தீர்வு இன்றியமையாதது என்பதை அனைவரும் மறு கேள்வி இன்றி ஏற்றுக் கொள்வார்கள்.

அதனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால், தீர்வை யாரிடம் கொடுப்பது? அவலம், சுரண்டல், தேச விரோதம், எதிர்ப்பு அரசியல் போன்றவைகளை வைத்து அரசியல் நடாத்தும் TNA இடமா யுத்தத்தால் எஞ்சி இருக்கும் தமிழ் மக்களின் தலைவிதியை ஒப்படைப்பது?

புலிகள் இருந்த காலத்தில் அடாவடித்தனம், பாரிய முறைகேடுகள், ஜன நாயக துஸ்பிரயோகம் செய்து தேர்தல் மூலம் 22 ஆசனங்களை பெற்று குறுக்கு வழியில் பாராளுமன்றம் சென்றவர்கள், போரால் அவதிப்பட்ட மக்களுக்கு ஒருவேளை உணவைக்கூட இவர்களால் கொடுக்க முடியவில்லை. அத்துடன் புலிகள் அழிக்கப்பட்ட 2009க்கு பின்பு நடந்த தேர்தலில் அவலங்களை விற்று 14 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டார்கள். புலிகள் இல்லாத காலத்தில் கூட TNA வட - கிழக்கு மக்களுக்கு ஒரு செங்கல் கூட பெற்றுக் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தார்மீக உணர்வுக்கும், நேர்மைக்கும் சம்பந்தன் தலைமையிலான TNA க்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தமிழ் மக்களுக்கு எந்த சேவையும் செய்யாமல் இவர்கள் எல்லாம் தமிழர்களை ஆள ஆசைப்படுவது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது' போன்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள், மத நல்லிணக்கம், தேச நல்லிணக்கம், தேச ஒருமைப்பாடு போன்ற விடயங்களுக்கும், TNA க்கும், அவர்களை ஆதரிக்கும் ஊடகங்களுக்கும், கணிசமான ஆதரவாளர்களுக்கும் என்றுமே சரிப்பட்டு வராது. ஏனெனில் அழிவையே வாழ்க்கையாக தரிசிப்பவர்களுக்கு ஆக்கத்தை தரிசிக்க முடியாமல் உள்ளது.

மொத்தத்தில் த.தே.கூக்கும் சரி, இவர்களது புலம்பெயர் ஆதரவாளர்களுக்கும் சரி, தமிழ் தேசியவாத ஊடகங்களுக்கும் சரி, தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் உண்மையான, இதய சுத்தியான அக்கறை கிடையாது என்பதே தமிழ் சமூகம் கடந்து வந்த வரலாற்றின் யதார்த்தமாக இருக்கிறது. இவர்களுக்கு காலாகாலமாக பொதுமக்களின் வாழ்வோடு விளையாடுவதும், மரணங்களை பூசிப்பதுமே அரசியல் ஆகிப்போய்விட்டது.

தமிழரின் தோல்விக்கும், அதிகமான இழப்புகளுக்கும் யார் காரணம்? தமிழ் தலைமைகளே காரணம். ஏன்? எதனால் என்று உண்மைகளை ஆராய்ந்தால், நம் அரசியல்வாதிகளிடம் தார்மீகம் இல்லை, சத்தியம் இல்லை. 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்' என்கிறது சிலப்பதிகாரம். ஆனால் தமிழ் காங்கிரசிலிருந்துதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை, அரசியல் அறம் இல்லாமலே பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகளின் அழிவின் பின்பு அனைவரினதும் எதிர்பார்ப்பு - அரசியல் ரீதியான சொல்லாடல்கள், கருத்துக்கள், விமர்சனங்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு பற்றியதாகவே இருக்கிறது.

எமது அக்கறை எல்லாம், கவலைகள் எல்லாம் மகிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்க டி.கிளார்க் போல அரசியல் தீர்வை வைக்கிறார் இல்லை என்பதல்ல. தமிழர்களுக்கு நெல்சன் மண்டேலா போன்ற தலைவர் இல்லையே என்பதுதான் நமதுகவலையாக இக்கிறது. அதற்கு மாறாக தமிழ் தரப்பிலும், தமிழ் சமூகத்திலும் பல சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் முன்னெடுக்க வேண்டி உள்ளது பற்றியே முற்போக்காளர்களின் கவலையும் அக்கறையும் உள்ளது.

சீர்திருத்தங்களும், மாற்றங்களும் எப்படி அமைய வேண்டுமென்றால், அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்த் தலைமைகளின் சுய இலாப அரசியல் அதிகாரங்களுக்காகவே தமிழ்த் தேசியவாத, தமிழ் அடையாளம் பாவிப்பதிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கப்பட வேண்டும்.

ஆரம்ப கட்டமாக 22 எம்.பிக்களாக இருந்த TNA பின்னர் 13 எம்.பிக்களாக வீழ்ச்சி கண்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர்களை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு வர வேண்டும். ஏனெனில் சம்பந்தன் தலைமையில் இயங்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகட்டும் அல்லது மற்றைய அரியநேத்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிறீதரன், மாவை போன்றவர்கள் என்றுமே நல்லிணக்க, தேச ஒருமைப்பாடு, பன்முக அரசியலுக்கு வரமாட்டார்கள். இவர்கள் அடிப்படையிலேயே தார்மீக உணர்வு, நேர்மை விடயங்களில் ஒரு பக்கத்தையே பார்ப்பவர்கள். நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருப்பது போல, தார்மீகத்துக்கு இரண்டு பக்கம் இருப்பது இவர்களுடைய அறிவுக்கு புலப்படுவதில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் அனைத்து தரப்பினரின் கருத்து எவ்வாறு இருக்கிறதென்றால், மகிந்த தீர்வு தரமாட்டார் என்பதாகவே இருக்கிறது. தீர்வு எட்டப்படுவதற்கு முன்பு தமிழர் தரப்பில் என்ன மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதில் அக்கறை குறைவாகவே காணப்படுகின்றன.

அதாவது, சிங்களத் தலைவர்களிடமும், மக்களிடமும் தீர்வை வலியுறுத்துவதற்கு முன்பு, தமிழ் சமூகமும் அரசியல் தலைமைகளும் பாரிய மாற்றங்களையும், விடயங்களையும் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

முதலில் தேசிய இனச் சிக்கலுக்கு வன்முறைப் பாதையை தேர்வு செய்ததற்கும், சகோதர சமூகங்களை அச்சுறுத்தியதற்கும், பாதிப்புகளை ஏற்படுத்தியதற்கும், முழுத் தேசத்தின் மனித வளங்களையும், இயற்கை வளங்களையும், பொருளாதாரத்தையும் எரித்து நாசமாக்கினதுக்கும், முழுத் தேசத்திடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

அடுத்த கட்டமாக தீர்வு விடயத்தில் தமிழ் தரப்பில் நடைமுறை சார்ந்ததாக கருத்தொருமிப்பு மிக்கதாக அனைவரும் ஒரு நிலைப்பாட்டுக்குள் வர வேண்டும். TNA க்கு மாற்றீடு உருவாக்கப்பட வேண்டும். தமிழ் ம்க்களை தேசப்பற்றுள்ளவர்களாக மாற்ற வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களும் நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். தமிழ் இனவாத அடையாளங்கள் கண்ணோட்டங்களுக்குப் பதிலாக, பொதுவான அடையாளங்கள் உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை, பிரதேச வேறுபாடுகள், பிராந்திய வேறுபாடுகள் களையப்பட வேண்டும். தமிழர்கள் தமிழர்களையே சுரண்டுதல், கொள்ளையடித்தல் நிறுத்தப்பட வேண்டும். மனித நேயம், மனிதத்தன்மை உள்ள மனிதர்களாக, சமூகமாக மாற்றம் பெறல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை ஒரு தனி நபரோ, ஒரு தனிக்கட்சியோ செய்துவிட முடியாது. இதற்காக பரந்த சமூகத்தளம் உருவாக்கப்பட வேண்டும். அந்தத் தளத்தில் முற்போக்குவாதிகள், ஜனநாயக வாதிகள், தேசப்பற்றை - மனித நேயத்தை - பன்முகத்தன்மையை வலியுறுத்தும் கலைஞர்கள், இணக்கப்பாட்டை - இன ஐக்கியத்தை வெளிப்படுத்தும் இலக்கியவாதிகளின் படைப்புகள் உள்வாங்கப்பட்டு, பல்லின சக சமூகங்களோடு கலாசார பரிவர்த்தனைகள், கலாசார பாலங்கள் உருவாக்கப்பட்டு, 'இலங்கை இலங்கையர்களுக்கே' என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது சம்பந்தன் கூறினார், "அனைத்து கிழக்கு தமிழ் மக்களும் ஏனைய வேற்று இன கட்சிகளுக்கும், ஆளும் கட்சிக்கும் வாக்களிக்காது TNA க்கு வாக்களித்து 80 வீதம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டால், நாம் ஆட்சி அமைக்கலாம்" என அங்கலாய்ப்புடன், இனவாதத்தையும் தூண்டுகிறார். இவர் இப்படி ஆட்சி அமைப்பதற்கு கனவு காணும் போது, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவை இன்னும் அதிகமாக இருக்கிறது எனக் கூறும் ஈ.பி.டி.பி அர்ப்பணிப்புடன் சேவை புரிந்து வருகிறது.

இத்தகைய நிலையானது த்மிழ் மக்களின் சமகால இடைவெளியையும், ஏற்றத்தாழ்வையும் வெளிப்படுத்தி நிற்கிறது. தற்போது தமிழ்மக்களுக்கு இருக்கும் அரசியல் தலைமைகளில் ஒரு பிரிவினர் உரிமையைப் பற்றியும், இன்னொரு பிரிவினர் அபிவிருத்தி, வறுமை, வாழ்வாதாரம் போன்றவைகளையும் கவனத்தில் எடுக்கின்றனர். எதிர்காலங்களில் இந்த நிலை மாறி, தேசிய வாழ்வில் உரிமை, வறுமை இதர விடயங்களையும் சமாந்தரமாக முன்னெடுக்கும் அரசியல் தலைமை உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் தமிழ் மக்களுக்கும் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அவர்கள் தேசிய வாழ்வில் இணைக்கப்படுவதுடன், அடையாள, அடிப்படைவாத, இனவாத அரசியலில் இருந்தும் வெளியேற வேண்டும்.

மகிந்த, தான் சிங்கள மக்களுக்கு மட்டும் உரிய தலைவரல்ல, அனைத்து இன மக்களுக்கும் தலைவர் எனக் கூறுகிறார். ஆனால் யுத்தம் முடிந்து கடந்த 3 வருட காலத்தில் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக பல வன்முறைகள், மத ரீதியான தாக்குதல்கள், இன்னும் பல அரங்கேறியுள்ளன. ஆக ஆட்சியாளர்கள் இலங்கையிலுள்ள சகல இனத்தவர்களுக்கும் உள்ள சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதுடன், பெரும்பான்மை இன மக்களுக்கு இருக்கும் உரிமைகளை சிறுபான்மை இன மக்களுக்கும் கிடைக்க உறுதிசெய்ய வேண்டும்.

**முதலில் தேசிய இனச் சிக்கலுக்கு வன்முறைப் பாதையை தேர்வு செய்ததற்கும், சகோதர சமூகங்களை அச்சுறுத்தியதற்கும், பாதிப்புகளை ஏற்படுத்தியதற்கும், முழுத் தேசத்தின் மனித வளங்களையும், இயற்கை வளங்களையும், பொருளாதாரத்தையும் எரித்து நாசமாக் கினதுக்கும், முழுத் தேசத்திடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்.**



# கூடங்குள அணு உலையால் பாதிப்பா?

# பேச்சு நடத்த செல்கிறது குழு

(கொழும்பு)

கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அணு சக்தி அதிகார சபை அதிகாரிகளுக்கிடையில் நடைபெறும முதலாவது கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியாவில் நடைபெற உள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இலங்கையில் இருந்து அறுவரடங்கிய குழுவொன்று அங்கு செல்ல உள்ளதோடு, கூடங்குளம் தொடரபில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்தும் இங்கு ஆராயப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு ஏதும் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் இலங்கை மக்களின் பாதுகாப்பை



உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். சுற்றியுள்ள நாடுகளின் பாதுகாப்பைப்பலப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அணு உலையினூடாக அணுக்கசிவு ஏற்பட்டால், அதனால் மன்னார், யாழ் குடா பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

எனவே, சர்வதேச அணு சக்தி உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா செயற்பட வேண்டும். இது தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்படும். அணுக்கசிவு நிகழும் பட்சத்தில், அதனால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அணுசக்தி அதிகார சபைத் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன, அணு சக்தி அதிகார சபை சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர், அமைச்சு உயரதிகாரிகள் இருவர் மற்றும் வெளிவிவகார உயரதிகாரிகள் இருவர் ஆகியோரும் நானும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கின்றோம்.

இந்தியா தரப்பில் அந்நாட்டு அணு சக்தி அதிகார சபை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். சர்வதேச அணு சக்தி அதிகார சபை உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா, இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்க வேணடும். இது தொடர்பில் நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளோம். இது இந்திய அணுசக்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்

## வரவு செலவுத்திட்டம் குறித்து விவசாயிகளுடன் பேச்சு



(கொழும்பு)

எதிர்வரும் 2013ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ், ஊடகவியலாளர் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஆலோசனைகள் மற்றும் உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தப் பேச்சுவ்ார்த்தை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அலரி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும், வசதிகளும் வடக்கு கிழக்கு விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத்தொடர்ச்சியாக நிவாரணங்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, இளம் தலைமுறையின் வளர்ச்சியில் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மிக முக்கியமான பங்கிருப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டு ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்

## அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய எதிர்க் கூட்டணி



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக மிக விரைவில் ஒன்றுபட்ட ஐக்கிய எதிர்க் கூட்டணியொன்று உருவாக்கப்படும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார். இந்தக் கூட்டணிக் கட்சியின் தொடக்கப் பேரணி எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித்த ரங்கே பண்டார, பாலித்த தேவப்பெரும, தயாசிறி ஜயசேகர, மாகாணசபை உறுப்பினர் சிறிலால் லக்திலக்க மற்றும் மைத்திரி குணரத்ன ஆகியோர் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

அத்துடன், முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வா மற்றும் மாதுலுவாவே சோபித்த தேரர் ஆகியோரும் அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர் என்று சரத் பொன்சேகா மேலும் கூறினார்.

## எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் புறச்சக்திகளின் அழுத்தங்கள்

### அமைச்சர் பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

புறச்சக்திகளினால் பிரயோகிக்கப்படும் கூடுதலான அழுத்தங்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். கொலமபிய பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விசேட உரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



உலகின் மிகக் கொடிய பயங்கரவாத அமைப்பை வென்றதனைப் போன்றே நாட்டின் ஏனைய சவால்களுக்கும் அரசாங்கம் வெற்றிகரமாக முகம் கொடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில் சர்வதேச விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை அமைப்பதன் மூலம், அதனை விடவும் முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

27 வீதமான சிங்கள மக்கள் வாழ்ந்து வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றியீட்டியுள்ளதாகவும், இதன மூலம் ஏனைய இன சமூக மக்களும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கின்றமை அம்பலமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் தனித்துவமான அணுகு முறைகளைப் பின்பற்றும் எனவும், அதே நிலமையே இலங்கையிலும் நீடிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ள வகையில் அமையப் பெற்றதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் அரசாங்கம் மேற் கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ், விளக்கமளித்துள்ளார்.

## தனிநபர் அதிகார ஆட்சிப்பலனை உணர்ந்து கொண்டுள்ளது ஐ.தே.க

### மனம் திறந்தார் கரு

(கொழும்பு)

சர்வாதிகார ஆட்சியாளரின் கைகளுக்கு அனைத்து அதிகாரங்களும் சென்றதனால் ஏற்படும் விபரீதங்களை நிறைவேற்று அதிகாரஆட்சிமுறையை உருவாக்கிய ஐ.தே.க. தற்போது நன்கு உணர்ந்துள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சர்வாதிகார வெறியில் செயறபடும் அரச நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு மாற்றாக நாடாளுமன்ற ஜனநாயக அரசாங்கம் ஒன்றைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தற்போது ஆரம்பமாகி விட்டதை அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தெளிவுபடுத்தியுள்ளது.

18ஆவது அரசியல் அமைப்புத்திருத்ததின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதீத அதிகா



ரங்களினால் சூழப்பட்ட தனிநபர், தனிக்கட்சி ஆட்சியை நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றது.

நாட்டில் இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், மோசடிகளில் அரசாங்கத்தின் பிரதேச அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக நீதிமன்றததில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்வதன் மூலம் சர்வாதிகாரம் தானாகவே தோன்றிவிடும். அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக அரச ஊடகங்களைப் பயன்படுத்தி அவதூறு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்கள் மீது விடுதலைப்புலிகள் என்ற முத்திரை குத்தப்படுகிறது அல்லது தேசத்துரோகி என்ற முத்திரை குத்தப்படுகிறது. இதனை அரசாங்கம் தனது வாடிக்கையாக கொண்டுளளது.என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர்ஸ்தானிகராலயத் தாக்குதல் பங்களாதேஷ் அரசு அதிருப்தி

பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினரால் உயர்ஸ்தானிகராலயம் தாக்கப்பட்டமை தொடர்பாக வெளிவிவகார அமைச்சிடம் அதிருப்திதெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டம் நடத்துவது இலங்கையுர்களின் உரிமை எனினும் உயர்ஸ்தானிகராலயம் மீது தாக்குதல் நடத்தியமையை ஏற்றுக் கொள்ள முடியாது. பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினரால் உயர்ஸ்தானிகராலயம் தாக்கப்பட்டமை தொடர்பில் பங்களாதேஷ் அரசாங்கததிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## 35000பேர் தோற்றும் கொரிய மொழிப்பரீட்சை

(கொழும்பு)


தென் கொரியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ளும் நோக்கில் சுமார் 35000 பேர் கொரிய மொழிப் பரீட்சையில் தோற்றுகின்றனர். எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன.

பரீட்சை நடைபெறும் பகுதிகளில் பாரியளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெறக் கூடாது என கொரிய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பரீட்சைக்குத் தோற்றும் 35000 பேரில் 5000 பேருக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த பரீட்சை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் பத்து இடங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது

# கீழ்ப்படிவும் விடாமுயற்சியுமே மாணவனின் வெற்றிக்கு அடித்தளம்



(நெடுந்தீவு)

கீழ்ப்படிவுடனும் விடாமுயற்சியுடனும் கல்வி கற்கும் போது தான் மாணவர்கள் முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியுமென ஈ.பி.டிபி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைவாக தீவகத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பணம் வைப்பிலிடப்பட்ட வங்கிப புத்தகங்களை கையளிக்கும் நிகழ்வு நெடுந்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரிய சமூகத்தினர் மாணவர்களது வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். எமது தலைவரின் ஆலோசனைக்கும், வழிகாட்டலுக்கும் அமைவாக தீவக மாணவர்களின் கல்வித் தராதரத்தை மேம்படுத்தும் வகையில் நாம் பல்வேறு செயற்திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) கருத்து தெரிவிக்கையில், தீவகத்தில் மட்டுமல்லாது யாழ்.மாவட்டம் முழுமையிலும் கல்வித் தராதரத்தை மேம்படுத்துவதற்கு முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபைத் தவிசாளருமான தானியல் றெக்சியன் (ரஜீவ்) உரையாற்றும்போது, புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டுமல்லாது க.பொ.த மற்றும் உயர் தரப் பரீட்சைகளிலும் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்பதுடன், புலமைப் பரிசில் பரீட்சைக்காக நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

# பரமர் சங்கமம்



"ஆறின கஞ்சி பழங்கஞ்சி" என்பார்கள் இதே நிலைதான் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிலையாக இருந்து வருகிறது.

இரண்டு காரியங்களைப் பற்றி இண்டைக்கு அலசலாம். ஒன்று யாழ்ப்பாணச் செயலகத்தால் இவ்வருட ஆரம்பத்தில் திருமதி இமெல்டா சுகுமார் அரச அதிபராக இருக்கையில் "யாழ்ப்பாணக்கீதம்" இயற்றி அனுப்பும்படி பத்திரிகைக்ளில் பரவலாக வேண்டுதல் விடப்பட்டிருந்தது.

பாடல்களை இயற்றி அனுப்பியவர்களுக்கு பாடல் கிடைத்ததாகவும், கூடிய விரைவில் பாடலைத் தெரிவு செய்து முடிவு அறிவிப்பதாகவும் செயலகத்தால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

மாதங்கள் ஒன்பது ஓடிவிட்டன அரச அதிபரும் மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். அதற்கு பின்பாக வருபவர் தானே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதைப்பற்றி ஊடகவியலாளர் கேட்டால் அது பற்றி தனக்குத் தெரியாதென கைகழுவி விடுகிறார் புதிய அரச அதிபர்.

அந்தப் போட்டிக்குப் பரமரும் 2 கீதங்களை அனுப்பி வைத்தார். சமீபத்தில் கடிதம் ஒன்றில் அதனை விசாரித்து எழுதியதற்கு மாதம் ஒன்று கடந்தும் பதில் எழுதப்படவில்லை.

பாடல் இயற்றுபவர்கள் இவர்களை நம்பி வாட வேண்டியது தானா? கஞ்சி எப்பொழுது தான் சூடாகக் கிடைக்கப் போகிறது?

மற்றொன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் காவல் நிலையம் ஒன்று இயங்குகிறது. அதேவேளை நூற்றுக்கணக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கடமையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் வைத்தியசாலை வளாகத்துக்குள் களவு, முடிச்சு மாறிகள் அடாவடிகளில் ஈடுபடுவோர் குறைந்த பாடில்லை. தேவையான நேரத்திற்கு பாதுகாப்பு உத்தியோக்தர்களும் இருக்க மாட்டார்.

கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை "கிளினிக்"கில் மருந்தெடுக்க வரிசையில் நின்ற நோயாளர் ஒருவருடன், வரிசையை ஊடறுத்துப் போனவர் தள்ளி விட்டு அடிப்பதற்கும் கை ஓங்கியுள்ளார்.

அவ்வேளை விடயத்தைத் தெரிவிக்க பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தேடினால் அவர் அந்த இடத்தில் காணப்படவில்லை.

காவல் நிலையத்தில் நுழைந்து தெரிவித்ததற்கு உடனடியாக காவல்துறையினரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவரை இருக்கச் சொல்லிவிட்டு பத்து நிமிடங்கள் கழித்து வந்தால் சம்பந்தப்பட்ட பேர்வழி நிற்கவா போகிறான்?

"போய் மருந்தை எடுத்துக் கொண்டு போங்கள், அவன் வந்து தாக்கினால் பாப்பம்" எண்டு சொல்லத்தான் இவர்களெல்லாம் கடமையில் இருக்கின்றார்களா?

பாதுகாப்பையும், சட்டம் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டியவர்களின் தூக்கத்தைத் தெரிந்து கொண்ட அடாவடி மற்றும் திருட்டு முடிச்சு மாறிகள் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் சுதந்திரமாக நடமாடி வருகின்றார்கள்.

கஞ்சி எண்டில்லை எந்தப் பதார்த்தமும் சூடாற முன்னம் தான் பயன்படும். காலம் தாழ்த்தினால் பழசுதானை இல்லையே பின்ன சொல்லுங்க பாப்பம்...

# முதியவர்களுக்கு இலைக்கஞ்சி

(கைதடி)

கைதடி முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தியாகி அறக்கொடை நிதியத்தினரின் அனுசரணையுடன் மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இன்று சனிக்கிழமை இந்த இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது. (80)

# கணக்காளர் போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவை நியமனத்துக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறுவதால் அதற்கான வகுப்புக்கள் இன்றும் நாளையும் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்பு வகுப்புக்களில் கலந்து கொண்டவர்கள் இவ்வகுப்பில் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த புதன்கிழமை யாழ்.மாநகர சுகாதார அதிகாரி பணிமனையினர் யாழ்.நகர்ப்பகுதியில் நடத்திய திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட காலாவதியான பொருட்களுடன் சுகாதார வைத்திய அதிகாரி, மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட குழுவினரைக் காணலாம். (54)

# பொழுதுபோக்கு கழகத்தின் பொதுக்கூட்டம்

வவுனியா பொழுதுபோக்கு கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கழமை மாலை 3மணிக்கு கழக வளாகத்தில் இடம் பெறவுள்ளதாக கழகத்தின் தலைவர் றோய் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கழகத்தின் வளர்ச்சி நிலை, அங்கத்தவர்களின் செயற்பாடுகள் மற்றும் புதிய நிர்வாகத்தெரிவின் அவசியம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (160)

# முரசின் இன்றைய பலன்

(06.10.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 20 ஆம் திகதி.
நட்சத்திரம் மிருகசீரிடம். சித்தயோகம். திதி சஷ்டி முன்னிரவு 7.25 வரை.
இராகுகாலம் 9.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை.
எமகண்டம் 1.32 - 03.02 வரை, குளிகன் காலம் 06.02 - 7.32 வரை.
மூன்றாம் புரட்டாதிச் சனி.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | வாழ்வு சிறக்க வழிகாட்டுபவர்களின் அன்பு, ஆசி கிடைக்கும். பணியில் உத்வேகம். பெருமை வந்து சேரும். சராசரி பணவரவு. உடல்நலமும்,சுற்றுலா. |
| ரிஷபம் | கலகலப்பு. கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். சுயமுயற்சியினால் வளர்ச்சி. பணவரவும், நன்மையும். சொத்து சேர்க்கை. அதிர்ஷ்டம் வாய்க்கும். நண்பர்கள் பாராட்டு. |
| மிதுனம் | மனதில் குழப்பம். நிதானத்தால் அவப்பெயர் தவிர்க்கலாம். பணியில் அதிக அக்கறை. வரவை விட செலவு கூடும். வாகன பயணத்தில் கவனம். |
| கடகம் | வேண்டிய உதவி கிடைக்கும். திட்டமிட்டவை நிறைவேறும். தொழில் தொடர்பு பலம் பெறும். கூடுதல் லாபம். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |
| சிம்மம் | அமைதி பரிமளிப்பு. தேங்கிய பணிகள் பூர்த்தி. தொழில் வளர்ச்சி. பணவரவு திருப்தி. குடும்பத்தில் மகிழ்ச்சி. உறவினர் வருகை. விருந்து. உடல்நலம் சீர். |
| கன்னி | குடும்பத்தில் சந்தோஷம். கேட்ட உதவிகள் கிடைக்கும. சொந்த- பந்தங்கள் தேடி வருவார்கள். லாபம் வரும். புதியன கற்று கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும். |
| துலாம் | நண்பரிடம் மனப்பகிர்வு. தடையான சூழ்நிலை சரியாகும். தொழிலில் அதிக அக்கறை. உபரி பண வருமானம். அறப்பணி ஈடுபாடு. சுப செய்தி வரும். |
| விருச்சிகம் | நண்பர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றுவீர்கள். பணிச் சுமை இருக்கும். குறைந்த பணவரவு. சேமிப்பு பயன் படும். உடல்நலம் கவனம். தாயிடமிருந்து ஆறுதல். |
| தனுசு | செயல்களில் மாறுபாடு. தொழில் தடைகளை சரி செய்வதில் நேரம் செலவாகும். வரவுக்கு மீறிய செலவு. உடல் நலத்திற்கு சிகிச்சை. ஒய்வு நன்மை தரும். |
| மகரம் | பேச்சைக் குறைப்பது நல்லது. பணியில் தாமதம் இருக்கும். கூடுதல் உழைப்பு. வரவு குறைவு. குடும்பத்தினால் பாசம். வாகன பயணம் கவனம். |
| கும்பம் | நல்லவர்களைக் கண்டறிவீர்கள். திறமைகள் வெளிப் படும். புதுமை படைக்கும் நாள். பணியிடத்தில் மரியாதை. நண்பரின் வழிகாட்டுதலால் பயன். |
| மீனம் | பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். மேலோர அறிமுகம். புது வாகனம். புது யுக்திகளுக்குப் பலன். ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள். |



# பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி கூட்டு முயற்சிக்கான பரிசு

(கொழும்பு)

வெற்றிகரமான குழுவொன்றின் அங்கமாகக் காணப்படுவதில் இலங்கை வீரர்கள் அனைவரும் பெருமையடைகின்றோம். பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி கூட்டு முயற்சிக்கு கிடைத்த பெரும் பரிசு என இலங்கை அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நான்கு இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ளமை குறித்துப் பெருமையடைகின்றோம். நான்கு இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றமை ஆச்சரியமானது. ஒரு வீரரின் காலத்தில் ஓர் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவதே அதிஷ்டகரமானது. இலங்கை அணி இதுவரை பங்குபற்றிய 3 இறுதிப் போட்டிகளில் ஒன்று பார்படோஸிலும், ஒன்று இங்கிலாந்திலும், ஒன்று மும்பையிலும் இடம்பெற்றிருந்தது. முதன்முறையாக இலங்கையில் ஓர் இறுதிப் போட்டியில் பங்குபெறவுள்ள நிலையில் இந்த இறுதிப் போட்டியை வித்தியாசமான முறையில் எதிர்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானிடம் உலக ருவென்ரி–20 தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த போது அன்ஜலோ மத்தியூஸ், அஜந்த மென்டிஸ் ஆகியோர் இளைய வீரர்களாகக் காணப்பட்டார்கள் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, தற்போது அணியிலுள்ள அனைவரும் அதிகமான ருவென்ரி–20 போட்டிகளில் பங்குபற்றியுள்ள நிலையில் இறுதிப் போட்டி குறித்து எதிர்பார்ப்புகளுடன் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# ஓய்வுபெறும் ஷூமேக்கர்



2012 சீசனுடன் பார்முலா 1 கார் பந்தயத்தில் இருந்து ஓய்வு பெற முன்னாள் சம்பியன் மைக்கேல் ஷூமேக்கர் முடிவு செய்துள்ளார். நவம்பர் 25ஆம் திகதி நடைபெற உள்ள பிரேசில் கிராண்ட் பிரீ பந்தயமே அவரது கடைசிப் போட்டியாக இருக்கும். ஷூமேக்கர் 7 முறை உலக சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# இரசிகரைக் கவராத அழகிகள் ஆட்டம்



(கொழும்பு)

ருவென்ரி-20 கிரிக்கெட்டில் அதிரடிக்கு மட்டுமல்ல, அவர்களை உற்சாகப்படுத்தும் நடன அழகிகளின் (சியர் லீடர்ஸ்) நடனத்திற்கும் இரசிகர்களின் மத்தியில் ஏகோபித்த வரவேற்பு உண்டு. ஐ.பி.எல். கிரிக்கெட்டில் வெளிநாட்டு அழகிகளின் துள்ளல் நடனத்தைக் காணவே தனிப் பட்டாளம் கூடுவது உண்டு. இலங்கையில் நடக்கும் ருவென்ரி-20 ஓவர் கிரிக்கெட்டில் உள்ளூர் மங்கைகளின் நடனம் இடம்பெற்று வருகிறது. இவர்களின் நடனம் இரசிகர்களை பெரிய அளவில் கவரவில்லை. குட்டைப் பாவாடை அணிய மறுத்து விட்ட இவர்கள் பேண்ட்டும், பனியனும் அணிந்து பவுண்ட்ரி, சிக்சர் அடிக்கும் போதும், விக்கெட் விழும் போதும் நடனமாடுகிறார்கள்.

இந்த நிலையில் மேற்கண்ட நடனத்தைக் குறிப்பிட்டு இலங்கை பத்திரிகையொன்று வெளியிட்டுள்ள செய்தியில், இந்த நடன அழகிகளின் நடனம் வசீகரிக்கும் அளவுக்கு கண்களுக்கு விருந்து அளிக்கவில்லை. அது மட்டுமின்றி இவர்களின் நடனம் உலக அரங்கில் இலங்கை பற்றிய தாழ்வான எண்ணத்தையும் ஏற்படுத்தி விடுகிறது என்று குறிப்பிட்டு இருந்தது.

இதையடுத்து இத்தகைய நடனத்துக்கு ஏற்பாடு செய்த போட்டி அமைப்பாளர்கள் மீது இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் புகார் செய்திருக்கிறார்கள். இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் நிஷாந்தா ரணதுங்க அளித்த பேட்டியில், நடன அழகிகள் மூலம் ஏற்படுத்தப்படும் அபிப்ராயங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல. இது இலங்கை மீதான நல்லெண்ணத்தைப் பாழ்படுத்தி விடும் என்று சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி.) புகார் செய்திருக்கிறோம். இந்த நடனம் தொடர்பாக நிறைய எதிர்மறையான கருத்துகள் எங்களுக்கு வந்துள்ளன. அதனை ஐ.சி.சி.க்கு அனுப்பி இருக்கிறோம். நடன அழகிகள் தேர்வு செய்ததில் நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றார்.

# ரூபவாஹினி வெற்றிக்கிண்ண கரப்பந்து கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

38ஆவது ரூபவாஹினி வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் வடமாகாண அணிகளுக்கிடையிலான போட்டி இன்றைய தினம் கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டித் தொடர் இன்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது. இக்கரப்பந்தாட்டப்போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆண், பெண் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் தேசியமட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கரப்பந்தாட்டப் போட்டிகளில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில்சிறந்த அணிகள் உள்ளமையால் இரு மாவட்ட அணிகளுக்கிடையிலும் பெரும் போட்டி நிகழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(12, 93)

# விட்டோரி சந்தேகம்

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணியில் டானியல் விட்டோரி இடம்பெறுவது சந்தேகத்திற்குரியதாகவுள்ளது. அதனை டானியல் விட்டோரியே வெளிப்படுத்தியுள்ளார்.

நியூசிலாந்து அணியின் சிரேஷ்ட வீரரான டானியல் விட்டோரி, டெஸ்ட் போட்டிகளில் அவ்வணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளராகக் காணப்படுவதுடன் துடுப்பாட்டத்திலும் முக்கிய பங்கை வகித்து வருகிறார்.

அண்மைக்காலத்தில் உபாதைகளால்அவதிப்பட்டு வரும் அவர், தற்போது இலங்கைத் தொடரையும் தவறவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் உலக ருவென்ரி-20 தொடரில் நியூசிலாந்து அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிய டானியல் விட்டோரி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான சுப்பர் 8 போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. அவரது குதிநாணில் ஏற்பட்ட உபாதை காரணமாக டானியல் விட்டோரி அப்போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் இலங்கையில் இடம்பெறவுள்ள இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தொடரில் தன்னால் பங்குபற்ற முடியும் என எண்ணவில்லை என டானியல் விட்டோரி தெரிவித்துள்ளார். தனது உபாதை சற்றுப் பழைய உபாதை எனவும், மீண்டும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த டானியல் விட்டோரி, ஓய்வு தேவைப்படுமென எண்ணுவதாகவும் தெரிவித்தார்.

# காலிறுதியில் ஷரபோவா, அசரென்கா



(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிக்கு மரியா ஷரபோவா, விக்டோரியா அசரென்கா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

3ஆவது சுற்றில் முன்னணி வீராங்கனை விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) 6,3, 6,3 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 6,0, 6,2 என்ற நேர் செட்களில் பொலோனா ஹெர்காகை (போலந்து) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதியில் விளையாட இந்தியாவின் மகேஷ் பூபதி , ரோகன் போபண்ணா ஜோடி தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

# கொலை மிரட்டல்

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் பங்கேற்க சென்றுள்ள உலக ரென்னிஸ் நட்சத்திரமான சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெடரரை கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதையடுத்து பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தனது குடும்பத்துடன் ஷாங்காய் வந்தடைந்தார் பெடரர். ஆனால் கடந்த மாதமே இவரைக் கொலை செய்துவிடுவதாக வந்த அச்சுறுத்தல்களால் அவருக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாரென்று தெரியாத வலைப்பதிவாளர் ஒருவர் இந்த மிரட்டலை தனது பிளாகில் வெளியிட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி பெடரரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளேன் என்று அவர் மிரட்டல் செய்தி வெளியிட்டுள்ளார். இதனால் ரென்னிஸ் வீரர்கள் தங்கியிருக்கும் விடுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வாய்மொழி மிரட்டலாகவே தெரிகிறது இருந்தாலும் மிகவும் சீரியசாக இதனைப் பார்க்கிறோம், மேலும் மற்ற ரென்னிஸ் வீரர்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.



# அடுத்த மாதம் மறு மதிப்பீடு

(மும்பாய்)

வரும் கிரிக்கெட் சுற்றுப்பயணத்தின்போது ஓய்வு பற்றி அறிவிப்பேனா? என்பது குறித்து இப்போதைக்கு ஒன்றும் கூறுவதற்கு இல்லை. அடுத்த மாதத்திற்கு பின்னர் எனது விளையாட்டின் போக்கை நானே மறுமதிப்பீடு செய்து ஓய்வு பற்றியும், எதிர்காலத் திட்டம் பற்றியும் முடிவு எடுப்பேன் என இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார். கடந்த 22 ஆண்டுகளாக நாட்டுக்காக நான் விளையாடி வருகிறேன். இந்தியாவுக்காக விளையாடுவது பெருமிதமும், கௌரவமும் மிக்கதொரு செயலாகும். என்னால் சிறப்பாக விளையாட முடியவில்லை என்பதை நான் உணரும்போது, விளையாடுவதை நிறுத்திக் கொள்வேன். நான் ஓய்வு பெற வேண்டும் எனக் கூறுகின்றனர். ஓய்வு விடயத்தில் என் மனம் கூறும்போக்கில் செல்லவே நான் விரும்புகிறேன். தற்போது வரை நான் நல்ல நிலையில் உள்ளதாகவே என் மனம் கூறுகின்றது. வரும் நவம்பர் மாதத்தில் நான் விளையாடிய பின்னர் மீண்டும் ஒருமுறை என் மனம் என்ன சொல்கிறது என மறுஆய்வு செய்வேன். நான் விளையாடுவதை நிறுத்தும்போது நாம் சரியாக விளையாடவில்லையோ? என்ற எண்ணம் எனக்கு ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஓய்வு என்பது எனக்குக் கடினமானதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். ஏனென்றால் ஓய்விற்குப் பிறகு என்ன செய்வது என்பது குறித்து நான் இதுவரை முடிவு செய்யவில்லை. என்னால் முடியும் என்ற எண்ணம் உள்ளவரை விளையாட்டில் தொடர்ந்து நீடிப்பேன். வெற்றியை அடைவதற்கான குறிக்கோள் என்னிடம் உள்ளதா? அணியின் உச்சவரிசையில் நீடிப்பதற்கான தகுதிக்கு நான் உரியவன் தானா? என்பதை அணியினர் உணர்வதை பொறுத்தும் எனது ஓய்வுத் திட்டம் இருக்கும். என்னைப் பற்றி மற்றவர்கள் கூறும் கருத்துகளில் இருந்து எப்போதுமே நான் விலகி நிற்க விரும்புகின்றேன். விமர்சிப்பவர்களையும், துதிப்பவர்களையும் பற்றி கவலைப்படாமல் அதிக கவனத்துடன் விளையாட்டில் முன்னேற வேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டு
# யாழ். செயலக அணி முதலிடம்



கிரிக்கெட் சம்பியன்



ஒட்டுமொத்த முதலிடம்

(கரவெட்டி)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஒட்டுமொத்தமாக அதிக புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்ட செயலக அணி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்பட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் கரவெட்டி மைக்கல் (மாலுச் சந்தி) விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கரம், சதுரங்கம், பூப்பந்தாட்டம், கிரிக்கெட், கால்பந்து, வலைப்பந்து ஆகிய போட்டிகளில் ஒட்டுமொத்தமாக 35 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்ட செயலகம் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. பருத்தித்துறை பிரதேச செயலகம் 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.



கால்பந்து சம்பியன்

## கால்பந்தில் கரவெட்டி சம்பியன்

கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதின. அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டியின் முற்பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றதுடன் இரு அணிகளாலும் கோல் எதுவும் போட முடியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோல் போடப்பட 1-1 என்ற அடிப்படையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உதயகுமார், சகல போட்டிகளிலும் சிறந்த வீரராக ஊற்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செந்தில்நாதன், போட்டியின் ஆட்டநாயகனாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விவேகானந்தன், தொடரின் வீரராக கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அனுராகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



வலைப்பந்து சம்பியன்

## கிரிக்கெட் மாவட்ட செயலகம் சம்பியன்

அணிக்கு 11 பேர் கொண்ட 15 ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு சங்கானை பிரதேச செயலக அணியும், மாவட்ட செயலக அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சங்கானைப் பிரதேச செயலக அணி 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சுரேன் 11 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 73 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மாவட்ட செயலக அணி 11. 3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ராஜாசூரி 29 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தார். இப்போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மாவட்டச் செயலக அணியைச் சேர்ந்த ராஜாசூரி, சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த சுரேன், சிறந்த களத்தடுப்பாளராக சங்கானை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த கிரிதரன், போட்டியின் ஆட்டநாயகனாக கிரிதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## வலைப்பந்தில் சண்டிலிப்பாய் சம்பியன்

வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மாவட்ட செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத்திறனை வெளிப்படுத்தின. முற்பாதி ஆட்டத்தில் மாவட்ட செயலக அணி 7-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இடைவேளையின் பின்னர் தமது ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்ததுடன் வேகமான ஆட்டத் திறனையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வெளிப்படுத்தியது. இதன் பயனாக 7-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலைபெற்றது. இறுதியில் 13-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியனானது. போட்டியின் சிறந்த வீராங்கனையாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த மணிமொழி, சிறந்த நடுக்கள வீராங்கனையாக யாழ். மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த ரூபசிங்கம், சிறந்த பெறுபேறு வீராங்கனையாக நளினி, சிறந்த தடுப்பாளராக எஸ். பிறேமினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் அருமைநாயகம் மற்றும் மாவட்ட, பிரதேச செயலக உயர் அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு போட்டி நிகழ்வைக் கண்டு களித்தனர். (12)

# இன்றைய இறுதிப் போட்டியில் அசத்தப்போவது யார்?

## யாழ். சென்றலைட்ஸ் — கொக்குவில் கே.சி.சி.சி





டொனால்ட் வெற்றிக் கிண்ண .ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ளன. யாழ். மாவட்டத்தில் இரு பெரும் பலம் பெருந்திய அணிகள் மோதவுள்ளமையால் இன்றைய போட்டி உள்ளூர் கிரிக்கெட் இரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை. (எஸ்.பி.)

# கண்ணாடியின் கதை




சுமார் எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதி மனிதன் கண்ணாடிகளை உபயோகப்படுத்தினான். அந்தக் கண்ணாடிகள், எரிமலைக் குழம்பு காய்ந்து கெட்டியாகும் போது உண்டானவை. இந்தக் கட்டிகளைக் கத்தி செய்வதற்கும், அம்புகள் செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்டான். கண்ணாடிகளை மனிதனே படைக்கும் முறை கி.மு. மூவாயிரம் ஆண்டளவில் மத்திய கிழக்கு நாடுகளில் உண்டாகியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். கி.மு. ஆயிரம் ஆண்டளவில் வெட்டவெளிகளில் கண்ணாடிக் குழம்புகளை வார்த்து கண்ணாடி செய்யும் முறை எகிப்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பிறகு ரோமானியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டளவில் கண்ணாடிகளாலான சிறிய பொருட்களை உருவாக்கிக் கொண்டார்கள்.


பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய நகரங்களான பாக்தாத் மற்றும் கெய்ரோவில் கண்ணாடி செய்யும் கலை வளர்ந்தது. இதனால்தான் இந்தக் காலகட்ட கண்ணாடிகளை இஸ்லாமியக் கண்ணாடிகள் என்று அழைத்தார்கள். பன்னிரண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை வெனிஸ் நகரில் இந்தக்கலை உச்சகட்டம் தொட்டது.

பாதரசத்தைப் பயன்படுத்தி முகம் பார்க்கும் கண்ணாடிகளை செயற்கையாகச் செய்யும் தொழில்நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால், இந்த நுணுக்கங்களை அவர்கள் இரகசியமாக வைத்திருந்தார்கள். ஆனால், பதினேழாம் நூற்றாண்டளவில் இந்த இரகசியம் கசிந்து, ஐரோப்பிய நாடுகள் பலவும் கண்ணாடிகள் செய்தன. 17 முதல் 19ஆம் நூற்றாண்டு வரை கண்ணாடிகளால் டெலஸ்கோப், தெர்மோமீற்றர், மைக்ரோஸ்கோப் போன்ற பல அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்தன.

இதன் தொடர்ச்சியாக பார்வைக் கோளாறுக்கான கண்ணாடிகள் ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டன. 1903ஆம் ஆண்டில்தான் அமெரிக்காவில் ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்கான கண்ணாடிகளை தயாரிக்கும் தானியங்கி இயந்திரம் உருவானது. கண்ணாடியில் உள்ள சுத்தத் தன்மையை வைத்தே அது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கலாம். நம் உருவங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள், அந்தந்தக் காலகட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியையும் பிரதிபலிப்பது ஒரு அழகான ஆச்சரியம்தான்.

# ஐயோ, வேண்டாமே, ஹீலியம் பலூன்

- என்.ராமதுரை -




இப்போதெல்லாம் ஏதாவது விழா என்றால் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன்களை வாங்கி ஆங்காங்கு கட்டி விடுகிறார்கள். இவை பார்ட்டி பலூன்கள் என்று அழைக்கப்படுகின்றன. மேலை நாடுகளில் கேட்கவே வேண்டாம். விதவிதமான ஹீலியம் பலூன்கள். விலங்குகள் உருவத்தில் பெரிய பெரிய பலூன்கள், உலோகப் பூச்சு கொண்ட பல வித வர்ணம் தீட்டப்பட்ட பலூன்களும் உண்டு.

ஹீலியம் என்பது ஒரு வகை வாயு. அது தீப்பிடிக்காதது. அந்த வாயு நிரப்பப்பட்ட பலூனின் நூலை விட்டால் அது உயரே போய்விடும். ஐதரசன் வாயுவைப் போலவே ஹீலியம் வாயுவும் காற்றைவிட லேசானது.

ஆகவே தான் ஹீலியம் பலூனும் ஐதரசன் பலூனைப் போலவே நூலை விட்டால் மேலே போய் விடும். ஆகவே விழாக்களில் ஹீலியம் பலூன்களைக் கொத்து கொத்தாகக் கட்டி வைப்பார்கள்.

ஹீலியம் என்ற வாயு உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது இந்தியாவில் தான். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜுலஸ் ஜோன்சன் என்ற வானவியல் விஞ்ஞானி பூரண சூரிய கிரகணத்தை ஆராய்வதற்காக சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா வந்திருந்தார். ஆந்திர மாநிலம் குண்டூரில் 1868 ஆகஸ்டில் அவர் சூரிய ஒளியின் நிறமாலையை ஆராய்ந்த போது மஞ்சள் நிற வரியைக் கண்டார்.

பின்னர் அதே ஆண்டில் ஒக்டோபர் மாதத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி நோர்மன் லாக்கியர் இந்த வி'யத்தை மேலும் ஆராய்ந்து அதுவரை அறியப்படாத மூலகத்தை (Element) அது காட்டுகிறது என்றார். இந்த இருவரும் ஹீலியத்தைக் கண்டுபிடித்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.



அந்த மூலகத்துக்கு ஹீலியம் என்று பெயர் வைக்கப்பட்டது. கிரேக்க மொழியில் ஹீலியம் என்றால் சூரியன். முதலில் சூரியனில் கண்டுபிடிக்கப்பட்டு அதன் பிறகே பூமியில் கண்டுபிடிக்கப்பட்ட மூலகம் உண்டென்றால் அது ஹீலியம் ஆகும்.

உலகில் மிக நீண்ட காலமாக ஹீலியம் உற்பத்தியில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்திவருகிறது. அமெரிக்காவில் நிலத்துக்கு அடியில் காணப்படும் எரிவாயுப் படிவுகளிலிருந்து ஹீலியம் எடுக்கப்படுகிறது. பல்வேறு காரணங்களால் அமெரிக்கா கடந்த பல ஆண்டுகளில் பல நூறு கோடி லீற்றர் அளவுக்கு ஹீலியம் வாயுவை சேமித்து வைத்து வந்தது.

இந்த சேமிப்புகளில் கணிசமான பகுதியை காலி செய்ய அமெரிக்க அரசு முடிவு செய்ததைத் தொடர்ந்தே ஹீலியம் நிறைய அளவில் சந்தைக்கு வந்தது. அதன் முக்கிய விளைவுகளில் ஒன்றுதான் ஹீலியம் பலூன்கள். எதுவும் தாராளமாக, எளிதில் கிடைக்கிறது என்றால் அப்பொருள் அர்த்தமில்லாமல் வீணடிக்கப்படும். ஹீலியம் வாயு விஷயத்தில் இது பொருந்தும்.

ஹீலியம் வாயு இயற்கை வளங்களில் ஒன்று. ஆனால் இது ஒன்றும் எல்லா இடங்களிலும் கிடைப்பது அல்ல. அண்மைக்காலமாக அல்ஜீரியாவிலும் ரஷியாவிலும் கிடைக்கிறது. ஹீலியம் வற்றாமல் கிடைக்கக்கூடிய பொருள் அல்ல என்பதால் உலகில் பல நிபுணர்களும் ஹீலியத்தை வீணடிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி வருகின்ற[illegible].

ஆசுஜ ஸ்கான் எடுக்கின்ற பெரிய கருவிகளில் காந்தங்களைக் கடுமையாகக் குளிர்விக்க ஹீலியம் பயன்படுத்தப்படுகிறது. அண்மையில் ஹிக்ஸ் போசான் துகளைக் கண்டுபிடித்த ஊநுசுழே ஆராய்ச்சிக்கூடத்தின் சுமார் 1600 காந்தங்களைக் கடுமையாகக் குளிர்விக்க ஹீலியம் பயன்படுத்தப்பட்டது. மற்றும் பல ஆராய்ச்சிக் கூடங்களுக்கு ஹீலியம் முக்கியமாகத் தேவைப்படுகிறது.

இன்று ஹீலியத்தை வீணாக்கினால் எதிர்கா[illegible]தில் ஹீலியம் கிடைப்பது திண்டாட்டமாகி விடலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் சுற்றிலும் ஆங்காங்கு கட்டப்பட்ட ஹீலியம் பலூன்களின் நடுவே மது மயக்கத்தில் உரத்த குரலில் கூச்சலிட்டபடி விருந்து கொண்டாடுவோரின் காதில் இதெல்லாம் விழுமா?

# நம்மிலிருந்து ஒரு துளி


- பிரசாந்தோ பானர்ஜி -

முதல் பார்வையில் காதல் வந்தது என்று யார் உங்களிடம் சொன்னாலும் அவர்கள் காதல் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள்தான். மனிதர்கள் வைத்திருக்கும் கற்பனைகளிலேயே மூத்த கற்பனை அதுதான். முதல் பார்வையில் காதல் என்று ஒன்றும் கிடையாது. காமம்தான் உண்மையில் உள்ளது. அறிந்துகொள்ளும் அவாவாக இருக்கலாம். உள்ளத்தை அரிக்கும் ஓர் உணர்வாகவும் இருக்கலாம். உங்களுக்குத் தெரியாததை நீங்கள் காதலிக்க முடியாது. உங்களால் புரிந்துகொள்ளாதவுரை உங்களால் நிச்சயம் காதலிக்கவே முடியாது. புரிந்துகொள்ளுதலுக்காக வாழ்க்கையின் பிற அருமையான விஷயங்கள் போலவே இதற்கும் காலம் பிடிக்கும். அதற்கு பல பருவங்களைக் காணவேண்டும். மழையும், கோடையும், இருளும் கடக்கப்பட வேண்டும். உறைந்த காலைகள் மற்றும் தகிக்கும் பிற்பகல்கள் வழியாக நீங்கள் பயணிக்கவேண்டும்.

அவளிடம் இப்போதும் என்னைப் பற்றிக் கேட்டால் பெரிதாக எதுவும் மாறிவிடவில்லை என்று சொல்லக்கூடும். ஆனால் எங்களைப் பார்த்தால் அவளது முதல் பார்வையில் ஏற்பட்ட எண்ணம் தவறாகப் போய்விட்டதென்று உணரலாம்.

முதல் பார்வையிலிருந்து நீடித்த காதலுக்கான துள்ளுபலகைக்கான உந்துதல் இருப்பதையொன்றும் நான் மறுக்கவில்லை. அந்த முதல் பார்வையின் சுடர் உங்கள் இதயத்தைப் பற்றவைத்து, அந்த தங்கநிற சூரிய ஒளி உங்கள் வானங்களை எல்லாம் ஜொலிக்கவைக்கலாம். ஆனால் அதிலேயே எல்லாம் நிறைவடைந்துவிடாது. அதைவிட இன்னும் போகவேண்டியுள்ளது.

நான் உங்களுடைய நேரத்தை எது காதல் அல்ல என்று கூறி இதுவரை வீணடித்துவிட்டேன். இப்போது கூறுகிறேன். அதுதான் பகிர்ந்துகொள்ளும் அனுபவம் என்பது. காதலுக்கு பிற நினைவு மண்டபங்களைப் போன்றே அடித்தளமும் அனுபவங்களும், பகிரும் அனுபவங்களும் தேவை. முதலில் ஹலோ சொல்வது. இரண்டாம் முறை லஞ்சுக்கு? என்பது. மூன்றாவது, "இல்லையில்லை... எனக்கு ஆட வராது. உங்களால் சொல்லிக்கொடுக்க இயலுமா?" என்பதெல்லாம் அனுபவங்கள்தான். இவையெல்லாம் மாற்றம் செய்துகொள்ளக்கூடியவை. ஒவ்வொரு அறிதலிலும் இவையெல்லாம் அங்கம் வகிக்கின்றன. ஒருவருக்கொருவர் பிரத்யேகம் என்பதை உணரும்போதுதான் அந்தப் பகிரப்படும் அனுபவங்கள் தொடங்கி, உங்கள் வாழ்வையும் உங்கள் ஆளுமையையும் மாற்றுகின்றன.



இத்தனைக்கும் பிறகு அந்த உணர்வு புதிதாக, வண்ணமயமாக, உயிர்ப்புடன், வாடாமல், மடியாமல் இருந்தால் அதற்கு காதல் என்று பெயர்.

ஒரு பதிவாகச் சொல்கிறேன். முதல் பார்வையில் நான் இப்போது திருமணம் செய்துகொண்டிருக்கும் பெண்ணுக்கு தம்பட்டமான ஒரு நபராக, ஹை என்பதற்கு மேல் எதுவும் பேசுவதற்கு தகுதியில்லாதவனாக தெரிந்தேன். அது நடந்து 32 ஆண்டுகள் ஆகிவிட்டன.

எனது நண்பன், இந்த உலகைச் சுற்றி புகைப்படங்களை எடுக்கவே நினைத்தான். ஆனால் கொஞ்சக் காலத்துக்குப் பிறகு புகைப்படக் கலைஞனாகும் கனவைக் கைவிட்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பொழுதுபோக்காக புகைப்படங்களை எடுக்கத் தொடங்கினான். ஆனால் ஓர் ஆண்டுக்கு முன்பு அவனது வாழ்வில் ஒளி வந்தது. அவன் கனவுகள் மீண்டும் வெளிச்சம் பெற்றன. அவன் புகைப்படங்களை எடுக்கும்விதம் பிடிக்கும் என்று அந்தப் பெண் கூறினாள். கமெராவைக் கையில் பிடித்திருக்கும்போது ரசிக்கும்படியாக அவன் முகம் இருக்கிறது என்றும் கூறினாள். அதன்பின் அவளே அவனுக்கு எல்லாமானாள்.

இன்னொரு தோழி ஒருத்தி இருந்தாள். அவள் தனது பெற்றோருடன் இருக்கும் புகைப்படத்தில் பெற்றோர்களின் பாடிகார்ட் போல குண்டாக இருப்பாள். அவளது நண்பர் ஒருவருக்கு சில பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவள் உதவினாள். ஒருநாள் அந்த நண்பருடன் பேசிக்கொண்டு போகும்போது "நீங்கள் இனிமையாக இருக்கிறீர்கள். என்னுடன் உடற்பயிற்சி செய்யுங்கள். நாளை என்னை ஜிம்மில் சந்தியுங்கள்" என்று கூறியிருக்கிறார். அவளும் சம்மதித்தாள். நாட்களும் சென்றன. அந்த நண்பரின் பெயர் டேவிட். அவளது உடலும் வாழ்க்கையும் முற்றிலும் மாறிவிட்டது. ஜிம்மில் அவர்கள் பகிர்ந்துகொண்ட அனுபவங்கள்தான் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் கொண்ட காதலை உணரவைத்தன.

ஆகையால் அனுபவங்களைப் பகிர்ந்து போய்க்கொண்டே இருங்கள். உங்களையும் உங்கள் ஆன்மாவையும் அனுபவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கும். உங்கள் புதிய சாகசங்களைச் செய்வதற்கு விட்டுச் செல்கிறேன்.

# ஒக்ரோபர் 05

ஒக்ரோபர் 05 உலக ஆசிரியர் தினம் என யுனெஸ்கோ அறிவித்திருந்தாலும் கூட, பல்வேறு நாடுகளில், வெவ் வேறு திகதிகளில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்தந்த நாட்டைச் சேர்ந்த சிறந்த கல்வியாளரை கௌரவிக்க அல்லது அந்தந்த நாட்டில், கல்வி தொடர்பாக ஏற்பட்ட ஒரு சிறப்பான மாற்றத்தை நினைவுகூர என்ற காரணங்களுக்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதால், ஒவ்வொரு நாட்டிலும் திகதி மாறுபடுகிறது. வெவ்வேறு தினங்களில் இத் தினத்தை கொண்டாடும் சில நாடுகளை நோக்குவோம்:




இலங்கை உட்பட இன்னும் சில நாடுகள் ஒக்ரோபர் 6 ஆம் திகதி "உலக ஆசிரியர் தினத்தை" கொண்டாடுகின்றன.

தாய்லாந்து - ஜனவரி 16 : 1956 ஆம் வருடம் முதல் கொண்டாடப்படும் இத்தினம் அங்கு பாடசாலை விடுமுறை தினமாகும்.

ஈரான் - மே 02 : 1980 மே மாதம் 02 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்ட பேராசிரியர் ஆயதொல்லா மொர்தாஸா மொதாஹ்ஹரி அவர்களை நினைவுகூரும் முகமாகவே இத் தினத்தை ஈரானியர்கள் தமது ஆசிரியர் [illegible]மாகக் கொண்டாடுகின்றனர். இத் தினத்தில் மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கு மலர்ச் செண்டுகளை வழங்குவர்.

ஐக்கிய அமெரிக்கா - மே மாதத்தின் முதலாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமை இத்தினம் கொண்டாடப்படும். அன்றைய தினம் உத்தியோகப் பற்றற்ற விடுமுறை நாளாகக் கருதப்படும். வாரம் முழுவதும் கலகலப்பான விழாக்கோல பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மலேசியா - மே 16 ஆசிரியர் தினத்தை "ஹரி குரு" என்ற பெயரிலும் அழைப்பர். நாடு முழுவதும் மிக உற்சாகத் துடன் விமரிசையாகக் கொண் டாடுவர். எனினும் அன்றைய தினம் விடுமுறை நாள் அல்ல.

சீனா - 1931 இல் தேசிய மத்திய பல்கலைக் கழகம் ஆசிரியர் தினத்தை ஸ்தாபித்தது. பிறகு சீனாவின் தத்துவஞானி கொன்பியூசியஸின் பிறந்த தினமான ஒகஸ்ட் 27 இற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் பிறழ்வுகளினால் மீண்டும் அது செப்ரெம்பர் 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது. எனினும் இன்றைய சீனர்களில் பெரும்பான்மையினர் மீளவும் கொன்பியூசியசின் பிறந்த தினத்திற்கு (ஒகஸ்ட் 27) கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர்.

இந்தியா - செப்டெம்பர் 5 : இந்தியாவின் இரண்டாவது ஜனாதி-பதியான கலாநிதி சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களை கௌரவிக்கும் முகமாக அவரது பிறந்த நாளில் ஆசிரியர் தினமும் கொண்டாடப்படுகின்றது.

இந்தோனேசியா - 2012 ஆம் ஆண்டுக்குரிய உலக ஆசிரியர் தின கூற்றாக "எனது ஆசான் - எனது வீரன்" (My Teacher - My Hero) எனப் பிரகடனப்படுத்தி, செப்ரெம்பர் 05 - ஒக்ரோபர் 05 வரை "உலக ஆசிரியர் மாதம்" என்றும் பிரகடனப்படுத்தி யுள்ளமை கவனிப்புக்குரியது.

ரஷ்யா - 1965 முதல் 1994 வரை ஒக்ரோபர் மாதம் முதலாம் ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் தினத் தைக் கொண்டாடினர். 1994 இன் பின் உலக ஆசிரியர் தினத்துடன் இணைந்து ஒக்ரோபர் 05 ஆம் திகதி கொண்டாடுகின்றனர்.

துருக்கி - நவம்பர் 24 : எனினும் இதுவொரு விடுமுறை தினம் அல்ல.

பல்வேறு கண்டங்களில் ஆசிரியர் தினம் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் "ஆசிரியர் தினம்" கொண்டாடுவதில்லை என்ற தகவல் சற்று அசாதாரணமாகவே இருக்கின்றது.




## அரிதான குரு!

ஒரு சமயம் அரிஸ்ரோட்டில் தம் மாணவருடன் ஆற்றின் கரைக்கு வந்தார். மாணவர்களை கரையில் நிற்க வைத்தவர், நான் சென்று ஆற்றில் ஏதாவது சுழல்கள் உள்ளதா என பார்த்து வருகிறேன் என்றார். அவர் ஆயத்தம் கொண்ட சமயம் அவரின் ஒரு மாணவர் தண்ணீரில் நீந்தி செல்வதை கண்டார். மறுகரை வரை சென்று திரும்பிய மாணவர், குருவே சுழல்கள் இல்லை நாம் தைரியமாக ஆற்றைக் கடக்கலாம் என்றார். அந்த நிலையில் அரிஸ்ரோட்டில், உன்னை சுழல்கள் எடுத்து சென்றிருந்தால் என்னவாகி இருக்கும் என்றார்.

அதற்கு அந்த மாணவன் இவ்வாறு பதில் கூறினான் "இந்த அலெக்சாண்டர் போனால் ஆயிரம் அலெக்சாண்டரை உருவாக்கும் வல்லமை கொண்டவர் நீங்கள். ஆனால் ஒரு அரிதான குருவை இழந்தால் நாங்கள் பரிதவித்துப் போவோம்."




## கரைசேர்ப்பவர்கள்

நீரில் மட்டுமே உயிர்வாழும் நண்டு இனங்கள் நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் கடற்கரைக்கு, தவறுதலாக வந்து தரையில் தத்தளித்துக் கொண்டிருக்க, ஒரு சிறுமி ஒவ்வொரு நண்டாக எடுத்துக் கடலில் தூக்கி எறிந்தாள். அதைக் கண்ட ஒரு பெரியவர், இப்படி தூக்கித் தூக்கி எறி-வதால், இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போகும் இத்தனை ஆயிரம் நண்டுகளின் வாழ்க்கையில் என்ன விளைவை ஏற்படுத்தி விட முடியும்? என்று கேட்டார். அதற்கு அந்த சிறுமி,

ஆயிரம் நண்டுகள் அல்ல, நான் தூக்கிப் போடும் இந்த ஒரு நண்டின் வாழ்க்கையில் அது மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றாள்.

அதைப் போலவேதான் ஆசிரியர்களும். எங்களை அறிவென்னும் கடலில் தூக்கி எறிந்து, அறியாமைக் கரையிலிருந்து காப்பாற்றுபவர்கள். சில நண்டுகளுக்குத் தெரியும் தாங்கள் காப்பாற்றப் பட்டிருக்கிறோம் என்று. பலநூறு நண்டுகள் இதைப் பற்றிய பிரக்ஞை கூட இல்லாதிருக்கலாம் - அதைப் பற்றியெல்லாம் ஆசிரியர்கள் கவலைப்படுவதில்லை. தாமுண்டு, தம் கடமை உண்டு என்று மாணவர்களைக் கல்விக் கடல் சேர்த்துக் கரைசேர்ப்பவர்கள்.

# ஒரு இரகசிய காதல் கடிதம்


அந்த நடிகை எனக்கு அடுத்த அறையில் தான் தன் தாயாருடன் இருந்தார்.


நான் என் அறைக்குள் நுழையப் போன போது என்னை அவர் அறையிலிருந்து "சார் சார்" என்று கூப்பிட்டார்.

இந்த நடிகை எப்போதுமே சாதாரணமாக என்னிடம் இலக்கியம் தான் பேசுவார். என்னைப்பற்றி யாரோ சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்தது.

தி.ஜா. வின் கமலம் குறுநாவலைப் பற்றி என்னிடம் "என்னமா எழுதுறார் சார் உங்க ஜானகிராமன்"

"எனக்கு ஒரு குருநாதர் இங்கே ஈரோடு பக்கம் உண்டு சார். அந்த ஆஸ்ரமத்துடைய பத்திரிகை இது. படிச்சு பாருங்களேன்."





அடடா நம்மை பண்டார சன்னதிகளோடு சேர்த்து நினைக்கிறாரே.... இருந்தாலும் அவர் கொடுத்த அந்தப் பத்திரிகையை கையில் வாங்கிக்கொண்டு அறைக்குள் நுழைந்து படுக்கையில் அமர்ந்து புரட்ட ஆரம்பித்தேன்.

அதிலிருந்து ஒரு காகிதம் கீழே விழுந்தது.

அது ஒரு கடிதம். இந்த நடிகை எழுதியிருக்கிறார். இவர் அறிமுகமான படத்து இயக்குனருக்கு. அவர் மிக பெரிய இயக்குனர்.

ஏற்கனவே திருமணமாகி குடும்பம் இருந்த நிலையில் பல வருடம் முன் ஒரு சிறந்த நடிகையை திருமணம் செய்து அவர் தற்கொலை செய்து கொண்டு அதனால் பல சிரமங்களுக்கு உள்ளானவர்.

அவரை இவர் பெயர் சொல்லி ஒருமையில் எழுதியிருந்தார். காதல் கடிதம் தான்.

"அன்று ஷூட்டிங் முடிந்து சேலம் ரயில் நிலையத்தில் கிளம்ப காத்திருந்த போது, உனக்கு நினைவிருக்கிறதா. நான் ரயில் நிலையத்தில் தலைக்கு பூ வாங்கி வைத்துக் கொண்ட போது நீ என்னருகில் வந்து பூவை முகர்ந்து பார்த்தாயே."

எனக்கு அப்போது மறைந்த அந்த நடிகை பற்றியும், இப்போது இந்த நடிகை அதே இயக்குனரிடம் காதல் கொண்டிருப்பது பற்றியும் எண்ணம் எந்த வகையில் எனச் சொல்ல முடியாமல் பல சிந்தனை.

கடிதத்தை எடுத்துக் கொண்டு அவர் அறைக்குள் நுழைந்து "நீங்க கொடுத்த பத்திரிகையில் இருந்தது" என்று கொடுத்தேன்.

அவர் அம்மா, மகளை ஒரு பார்வை பார்த்தார்.

பொதுவாக சினிமாஉலகில் அம்மாவுக்கும் பெண்ணுக்கும் பெரிய ரகசியமெல்லாம் கிடையாது. ஒருவேளை அந்த அம்மாவே கூட அந்த இயக்குனருக்கு எழுதப்பட்ட கடிதத்தை மகளுக்கு Dictate செய்திருக்கலாம். அதனால் என்ன இப்படி கவனக்குறைவாய் இருக்கிறாய் என்ற பார்வை தான் பார்த்தார்.



அந்த நடிகை நன்றியோடு என்னைப் பார்த்தார். "தாங்க்ஸ் சார்... ரொம்ப தாங்க்ஸ் சார்..."

அவருக்கு தெரியும். என்னைத் தவிர வேறு யார் கைக்காவது போயிருந்தால் இரகசியம் அம்பலமாகியிருக்கும். கிசுகிசு பத்திரிகை செய்தியாக கூட வந்திருக்கும்.

அந்த நடிகை சின்னத்திரை ரேவதி என பின்னால் பிரபலமானார்!

இப்போது இரண்டு மூன்று வருடம் முன் பாலு மகேந்திரா என் கணவர் தான் என்று பேட்டி கொடுத்த மௌனிகாதான். பாலு மகேந்திராவும் அவரைத் தன் இரண்டாவது மனைவி என்றே சொல்லிவிட்டார்.

இப்போது இந்த விஷயத்தை நான் எழுதுவதில் தவறில்லை தானே.

- R.P. ராஜநாயஹம் -




## நீங்களும் பங்குபற்றி பரிசுகளை வெல்லுங்கள்...

**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது**

**1**

01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் பின்வரும் சதுரங்களின் தொகுதியை அடிப்படையாகக் கொண்டவை. இச் சதுரங்களில் குறித்த ஒரு கோலத்திற்கேற்ப சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை, வெள்ளை என்னும் நிறங்கள் பூசப்பட்டுள்ளன. சதுரங்கள் சிலவற்றில் தனி நிறங்களும் வேறு சிலவற்றில் இரு நிறச் சேர்மானமும் பூசப்பட்டுள்ளன. சதுரங்கள்

நிறங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள கோலத்தைக் கண்டு, இலக்கமிடப்பட்ட சதுரங்களில்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | 36 | | ப.சி | வெ.சி |
| | நி | | 37 | |
| சி.ம | 38 | ம | | வெ.ம |
| | நீ.ப | | பு | 39 |
| சி.வெ | நீ.வெ | 40 | | வே |

02) ......................

02) ......................

03) ......................

04) ......................


05) ......................

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**2**


பின்வரும் வினாக்களில் ஒவ்வொன்றிலும் மூன்று விடயங்கள் தரப்படுகின்றன. அந்த விடயங்களுக் கிடையேயுள்ள தொடர்பு அடிப்படையில் A,B,C,D,E,F என்ற வினாக்கள் வட்ட வரைபட உருவில் தரப்பட்டுள்ளன. 1-5 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள விடயங்களின் உறவு முறையை எவை சரியாகக் காட்டுகின்றன எனக் குறிப்பிடுக.

1) கோதுமை - தானியம் - சோளம் ..............................
2) கோப்பி - தேயிலை - சீனி ..............................
3) பருத்தி - சில்க் - கம்பளி ..............................
4) உடம்பு - முகம் - மூக்கு ..............................
5) நாய் - மிருகம்- செல்லப்பிராணி ..............................




**3**

1 தொடக்கம் 4 வரையான வினாக்கள் கீழே தரப்பட்ட உருவை அடிப்படையாகக் கொண்டவை. உருவில் எண்கள் ஏதோவொரு கோலத்தில் அமைந்துள்ளது.




1) A இல் வரவேண்டிய எண்
1) 6 2). 11 3)14 4) 10

2) B இல் வரவேண்டிய எண்
1) 8 2) 200 3) 220 4) 525

3) C இல் வரவேண்டிய எண்
1) 1131 2) 1162
3) 625 4) 825

4) D இல் வரவேண்டிய எண்
1) 2215 2) 4125
3) 3125 4) 6786

## புதிர்ப்போட்டி 11 இல் வெற்றியீட்டியோர்



பெயர்:
கி.கயறூபி
பாடசாலை:
யா/ சங்கானை
சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்:
த.மதுஷா
பாடசாலை:
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை.



பெயர்:
ய.தேவகீர்த்தனா
பாடசாலை:
யா/
நெடுந்தீவு மகா வித்தி.



பெயர்:
இ.பிரியதர்சினி
பாடசாலை:
யா /உடுவில்
மகளிர் கல்லூரி.



பெயர்:
கு.ஜெயராமன்
பாடசாலை:
யா/ மத்திய கல்லூரி.

## புதிர்ப்போட்டி 11 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்


| | | |
|---|---|---|
| பெயர்: மெ.இங்கிதை<br>பாடசாலை:<br>யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. | பெயர்:<br>ரா.சுமித்தா<br>பாடசாலை:<br>யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி | பெயர்:<br>பி.மேசிலோட்<br>பாடசாலை:<br>யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி. |
| பெயர்: செ.அபிமன்<br>பாடசாலை:<br>யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி. | பெயர்: கே.கோகில வாணி<br>பாடசாலை:<br>யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை | பெயர்: க.தினேஸ்<br>பாடசாலை:<br>யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி. |
| பெயர்: து.கோகுலன்<br>பாடசாலை:<br>யா/ இந்துக் கல்லூரி. | பெயர்: ஜோன்சன் ஏரன் டேவிஸ்<br>பாடசாலை:<br>யா/ பரியோவான் கல்லூரி. | பெயர்: செ.சிந்துஜன்<br>பாடசாலை:<br>யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி. |
| பெயர்: ரா.சஸ்மிதா<br>பாடசாலை: யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி. | பெயர்: க.பவித்திரா<br>பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி | |

## புதிர்ப்போட்டி 11 இற்கான சரியான விடைகள்

**1**
1) ஜப்பான்
2) அமெரிக்கா
3) கனடா
4) ரோலண்ட் ஹில்
5) வீரமாமுனிவர்

**2**
1) 2
2) 3
3) 1
4) 2
5) 1

**3**
1) 3
2) 1
3) 4




## அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான
வீதி,
யாழ்ப்பாணம்.**

**புதிர்ப்போட்டி 13 இற்கான விடைகளை எதிர்வரும் ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.**

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................

பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- :-..............................

தொலைபேசி இல.:-..............................

முகவரி :-..............................

..............................

# வீடு புகுந்து கொள்ளை; பிணை மனு நிராகரிப்பு

(திருநெல்வேலி)

சாவகச்சேரியில் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து கொள்ளையடித்த மூவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிராகரிக்கப் பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி இரவு ஆயுதம் தரித்த நிலையில் வீட்டுக்குள் நுழைந்து 5 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும், பணத்தையும் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டி முல்லைத்தீவைச் சேர்ந்த மனோகரன் வரதாஸ், கணபதிப்பிள்ளை தவராசா மற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரதீபன் ஆகியோர் சாவகச்சேரிப் பொலிசாரினால் 28.05.2012இல் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 02.10.2012இம் மனு மீதான விசாரணை மேல்நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது. அரச சட்டவாதி நளினி கந்தசாமி பிணை மனுவைக்கடுமையாக ஆட்சேபித்தார். இக் கொள்ளைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மேலும் கைது செய்யப்படவேண்டியுள்ளதாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள்முழுமையாக மீட்கப்படவில்லை எனவும் தெரிவித்து சந்தேகநபர்களைப் பிணையில் விடுவதை ஆட்சேபித்தார்.

இதனையடுத்து பிணை மனு மீது தீர்ப்பு வழங்கிய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் இக் கொள்ளைச் சம்பவம் ஒரு பாரதூரமான சம்பவமாகக் கருதப்படுவதாகத் தெரிவித்து மனுவை நிராகரித்துத் தீர்ப்பளித்தார். (137)

# தெரிவுக்கூட்டம்

(வலிகாமம்)

சுவாமி விவேகாநந்தரின் 150 ஆவது ஜனன தின விழாவை நடத்தும் முகமாக விழாக்குழுத் தெரிவுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் உடுவில் பிரதேச செயலர் பிரிவின் இணைப்பாளர் என்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ம[illegible]தனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய அற நெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுவாமி விவகாநந்தரின் கொள்கைகளைப் பரப்பும் நோக்குடன் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாக அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ் விழாக்குழுத் தெரிவுக் கூட்டத்திற்கு இப்பிரதேசத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், இந்து ஆலய நிர்வாகிகள், அறநெறிப்பாடசாலைப் பெறுப்பாசிரியர்கள், இந்துமன்றம், சனசமூக நிலையம், மாதர்சங்கம், ஏனைய சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

# நெடுந்தீவில் நான்கு மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி





(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப்பாடசாலையில் இருந்து இந்தவருடம் ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியெய்திய நான்கு மாணவர்களுக்கு நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளர் தானியேல் றெக்சியன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்காலத்தில் வரும் பரீட்சைகளிலும் சரி ஏனைய விடயங்களிலும் சரி சிறந்த பெறுபேற்பேற்றைப்பெற வேண்டும். என்பதோடு இவர்களை நல்ல முறையில் உருவாக்கிய ஆசிரியர்களுக்கும். அதிபர்களுக்கும் பெற்றோருக்கும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். மேலும் இப் பரீட்சையில் அன்ரன்ஜெயராட் மேரிநிவேதா, (யா.நெடுந்தீவு மகா வித்தியாலயம்) 163 புள்ளிகளையும், கந்தையா தக்ஷாயினி, (யா.நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி) 161 புள்ளிகளையும், ஜோாஜ் அமலதாசன் றீனா, யா.நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி), 149 புள்ளிகளையும், அருட்பிரகாசம் அன்ரனிராஜ், (யா.நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.வித்தியாலயம், 157 புள்ளிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆண்டுவிழா

வவுனியா நிருத்திய நிகேதன கல்லூரியின் 18 ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வவுனியா நகர கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வட மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி த. அன்ரன் சோமராஜா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் செல்வி க.கந்தையா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (160)




உலக ஆசிரியர் தினம் நேற்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்.டொன்.பொஸ்கோ மழலைகள் பூங்காவில் மாணவன் ஒருவன் தனது ஆசிரியைக்கு சொக்லேட் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் யாழ். மத்திய கல்லூரி மாணவன் ஒருவன் தனது ஆசிரியர் ஒருவருக்குப் பரிசுப் பொருள் வழங்கி ஆசீர்வாதம் பெறுவதையும் காணலாம். (படம் ஆர். ராஜ்குமார்)

# மெய்தான் பாருங்கோ...

## சூட்சும வெளிப்பாடுகள்



"போனால் போகட்டும் போடா... இந்தப்பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாரடா..." எண்ட பாட்டு, இப்ப கேட்டுக் கனநாளாப்போச்சுப் பாருங்கோ! கவிஞர் கண்ணதாசன் எழுதிய அந்த நாளேப்பாட்டு. வாழ்க்கையில நல்லாப் பட்டுக்களைச்சு விளிம்பு நிலைக்கு வந்த ஒருவன், சாவைத் தூசியாக நினைச்சுப் பாடுற பாட்டு அது.

இந்த வாழ்க்கை நிலையில்லாதது. இந்த நிலையில்லாத வாழ்க்கையில எத்தனை ஆட்டங்களை மனிசர் ஆடிக் காட்டிப் போட்டு, "வந்தது தெரியும்! போவது எங்கே...? வாசல் நமக்கே தெரியாது..." எண்டு சொல்லாமல் சொல்லிக் கொண்டு போய்ச் சேருகினம் பாருங்கோ!

இந்தப் பூமியில நிலையில்லாத வாழ்வுக்காக எத்தனை போராட்டங்கள்... அடிதடிகள்... குத்து வெட்டுக்கள்... வன்முறைகள்... சீரழிவுகள்... உலகப்போர்கள் நடக்குதெண்டதை யோசிக்கேக்கை ஒருபக்கம் கவலையாகவும், இன்னொரு பக்கம் சிரிப்பாகவும்தான் கிடக்குது. 'வாழ்க்கை வாழ்வதற்கே...' என்ற தத்துவத்தைத் தெரிஞ்சும் தெரியாமலுமாக தங்கட காலத்தை ஓட்டி முடிக்கிற மனிசரைப் பாத்துத்தான் என்னவோ "ஆடும் வரை ஆட்டம்... ஆயிரத்தில் நாட்டம்..." எண்டும், "கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவதென்ன...?" எண்டும் கவிஞன் எழுதியிருக்கிறான் போலக்கிடக்குது.

மானிடமாகப் பிறந்து, அந்த மானிடத்துக்குரிய விதியின் கணக்கு முடிக்கப்படும் வரை, அந்த மானிடன் வாழ்ந்துதான் ஆகவேண்டும். இந்த வாழ்ந்து முடிக்க வேண்டிய வாழ்க்கைக்குள்ள ஒவ்வொரு மனிசருக்கான பயணப்பாதைகளும் வேறு வேறானவை கண்டியுளே! இந்தப் பாதைகளில ஒவ்வொருத்தரும் பயணிக்கேக்கை ஒவ்வொரு அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுகினம். இந்த அனுபவங்களைப் பயன்படுத்தி சிலர் முன்னேற்றமடையினம். வேறுசிலர் பயனற்றுப் பற்றற்ற நிலையில பரதேசிகளாகி விடுகினம். வேறை சில ஆட்கள் வாழ்க்கை வெறுத்துப்போய் விரக்தியாய் இருப்பினம். இப்படி விரக்தியாய் இருக்கிறவை "போய்த்துலைய வழியில்லையே" எண்டும் புலம்புவினம். இப்பிடிப்புலம்புற ஆட்கள் றோட்டால, தெருவால 'போய்ச் சேருகிற' ஆட்களைப் பார்த்து பொறாமைப்படுவினம். இதைத்தான் கவிஞரும் "சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பார். வந்தவனைக் கேட்டால் சென்றுவிடு என்பார்..." என்று எழுதியிருக்கிறார் பாருங்கோ!

உயிருக்கு வீடாயிருக்கிற உடம்பு எப்படி நிரந்தரமில்லையோ அதேபோலத்தான் உடம்புக்கும் உயிருக்கும் இந்த வீடாகிய உலகமும் நிரந்தரமில்லை எண்டது விளங்குது. இங்கு 'எதுவும் நிரந்தரமல்ல' எண்ட விளக்கத்தைப் புரிஞ்சுகொண்டு நல்லவர்களாக வாழ நினைச்சாலும், அவையளைச் சுற்றியிருக்கிற சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் அவையளை விடுகிறமாதிரி இல்லை. பேசாமல் ஒதுங்கிப் போக நினைச்சாலும் 'வில்லண்டங்கள்' விழுந்தடிச்சு பின்னால துரத்திக் கொண்டு வரத்தான் பார்க்குது கண்டியளே!

மானிட மனஉணர்வுகள் எல்லாம் சமமானவையல்ல. "ஆசை, களவு, கோபம் கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம்... அன்பு, நன்றி கருணைகொண்டவன் மனித வடிவில் தெய்வம்..." என்ற பாடலின் வரிகள் போன்று இருவர்க்க முரண்பாடுகளாய் மானிடம் தன்வழியில் பயணிக்குது. இந்தப் பயணம் கடைசியில "ஆடி அடங்கும் வாழ்க்கையடா! ஆறடி நிலமே சொந்தமடா..." எண்டு முடிஞ்சு போகுது. இந்த ஆறடி நிலத்துக்குள்ள அடங்கிப் போற வாழ்க்கையின் உடற்கூட்டை அக்கினி எரிச்சாலும் சரி, அரை 'இஞ்சி'ப் புழுக்கள் திண்டாலும் சரி எதுவுமே நிரந்தரமில்லைக் கண்டியளே!

வாழ்க்கை எப்படி நிரந்தரமில்லையோ அது போலத்தான் உணர்வுகளும் நிரந்தரமில்லை. அன்பு, கோபம், பகை, வெறுப்பு... எண்ட உணர்வுகள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றமாதிரிச் செயற்படேக்கை மனம் கட்டுப்பட்டுப்போகுது. சிலவேளைகளில கட்டுப்பாடாமலும் போகுது. பிறகு அந்த உணர்வுகளால அல்லற்பட்டு புத்திதெளிவடையேக்கைதான் அதுவும் தேவையற்றது என்ற வெளிப்பாடும் வருகுது.

இந்த வாழ்வின் சூட்சுமவெளிப்பாடுகளை உமர்கய்யாம் எண்ட இஸ்லாமியக் கவிஞர் ஒருவர் பூக்களுக்கு உவமானமாக வெளிப்படுத்துகிறார் பாருங்கோ!.

புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையஞ் சோலையிலே
மலர்ந்து நல்ல மணம் வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்
உலர்ந்து வாடி சேற்றினிலே
உதிரு மவையும் ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வை யிதிற்
கண்ணாற் கண்டு தெளிவாயோ!

ஒருநாள் பூக்களைப் போலத்தான் மனிசருடைய வாழ்க்கை. அதற்குள் அடுத்தவர்களோடை எத்தனை பிரச்சினைகள்... புடுங்குப்பாடுகள்... நிலையற்ற வாழ்க்கைமீது நிம்மதியைத் தேடுவதாக இருந்தால், முதலில் வாழ்க்கையின் தத்துவ சூட்சுமத்தை விளங்கிக்கொள்ள வேணும் கண்டியளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# நிலக்கீழ் நீர்ப்பகுதிகளை வரைபடத்தில் குறிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நிலக்கீழ் நீருள்ள பகுதிகளை வரைபடத்தில் குறிப்பதற்கு நீர்ப்பாசன மற்றும் வள முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

நிலக்கீழ் நீருள்ள பகுதிகளை அடையாளங்கண்டு அவற்றை வரைபடத்தில் குறிக்கும் தேசிய ரீதியான செயற்றிட்டம் நாட்டில் முன்னெடுக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு இரசாயன பதார்த்தங்கள் நிலக்கீழ் நீரில் கலப்பதன் காரணமாக இன்னும் 25 வருடங்களில் நாட்டில் நிலக்கீழ் நீர் சுத்திகரிப்பு தொடர்பில் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய நீர் வழங்கல் அதிகார சபையினால் நிலக்கீழ் நீரின் தன்மைகள் தொடர்பில் கண்டறிவதற்கு தற்போது ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், அம்பாறை, அநுராதபுரம், புத்தளம், அம்பாந்தோட்டை, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய ஆறு மாவட்டங்களில் 30 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள நீர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வுகளின் ஊடாக நிலக்கீழ் நீரின் தன்மைகள், இரசாயனக் கலப்பு பக்டீரியா அளவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கண்டறிவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது குறித்த பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளில் இருந்து நீரின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன், குழாய்க் கிணறுகள் இல்லாத பகுதிகளில் அவற்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென 190 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ செயற்பாடு இந்தியா, இலங்கையுடன் பேச்சு

(கொழும்பு)

பாகிஸ்தான் உளவுப் பிரிவினரின் நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானின் முக்கிய உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ இலங்கையின் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் செயற்பட்டு வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தன.

பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு கியூ காவல்துறையினருக்கு அறிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பாகிஸ்தான் உளவுப் பிரிவினர் செயற்பட்டு வருகின்றனரா என்பது குறித்து ஆராய்ந்து அது தொடர்பில் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவு இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களைப் பணிக்கு அமர்த்தி வருவதாக அண்மையில் இந்திய றோ உளவுப் பிரிவு தகவல் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சான்றிதழ்கள் அனுப்பி வைப்பு

(அச்சுவேலி)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் இயற்கை விஞ்ஞான பாடம் கற்பிக்கும் என்.ஏ.சி. கழக உறுப்பினர்களாகவுள்ள ஆசிரியர்களுக்காக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கி வரும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் இலங்கையின் இயற்கை விஞ்ஞானியும் விலங்கியல்துறைப் பேராசிரியருமாகிய சரத் கொட்டகமவினால் நடத்தப்பட்ட இயற்கை விஞ்ஞானம் தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான வரவுச் சான்றிதழ்கள் அவ் ஆசிரியர்களின் எதிர்காலச் செயற்பாடுகளுக்காக அவர்கள் கடமையாற்றி வரும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த காலங்களில் இவ்வாறான செயலமர்வுகளில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (03)

# மாற்று வலுவுள்ளோருக்கு தருமபுரத்தில் விழிப்புணர்வு

(கண்டாவளை)

கண்டாவளை - தருமபுரத்தில் தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் மாற்றுவலுவுள்ளோருக்கான விழிப்புணர்வு வலுவூட்டல் நிகழ்வு எதிர்வரும் 09,10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் 40 மாற்றுவலுவுள்ளோரும், அவர்களின் பெற்றோர் பாதுகாவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர், சமூக சேவை அலுவலர் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ். உமாநாத், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வ.தபேந்திரன் ஆகியோர் இதற்கான ஒருங்கிணைப்பு பணிகளைச் செய்து வருகின்றனர்

# படையினரின் சீருடை 2 பில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

பாதுகாப்புச் சேவையில் உள்ளவர்களுக்குத் தேவையான சீருடைத் துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2 பில்லியன் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் முன்வைத்த தீர்மானத்தையடுத்து இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

முப்படையினர் - பொலிஸார் - விசேட அதிரடிப்படையினர் - சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் தேசிய மாணவர் படையணி ஆகியோருக்கு சீருடைகள் கொள்வனவு செய்வதற்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஆன்மிக வகுப்புக்கள்

(கிரு-சிகரம்)

யாழ்ப்பாணத்தில் வடமாகாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகளினால் ஆன்மிக வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன. இதனடிப்படையில், இந்துக்களின் புனித நூலான "ஸ்ரீமத் பகவத்கீதை" வாராந்த விளக்க உரையும் தற்போது நடாத்தப்படுகிறது.

யாழில் இலக்கம் 9, செட்டித்தெரு ஒழுங்கை (கோவில் வீதி ஊடாக) நல்லூர் எனும் முகவரியில் நடைபெறவுள்ள இந்த வகுப்புக்களில் சைவசித்தாந்த விழுமியங்கள், ஆன்மிகக் கதைகள், பஜனைப்பாடல்கள், விளையாட்டுக்கள் போன்ற பல அம்சங்கள் இடம்பெறவுள்ளன. நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள இவ் வகுப்புக்கள், தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதுடன் இதில் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் இணைப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி, விஞ்ஞானபீட, மருத்துவ பீடப் பிரதேசங்கள், பலாலி வீதி, கந்தர்மடம், வைமன் வீதி, முலவை, கச்சேரியடிப் பிரதேசம், நல்லூர், கோவில்வீதி, நக்காவீதி, 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள், மாட்டின் வீதி, புகையிரத நிலைய வீதி, கச்சேரி நல்லூர் வீதி, வளம்புரம், பாண்டியன் தாழ்வு, ஈச்சமோட்டை, பழைய பூங்கா வீதி, இராசாவின் தோட்டம், நாவலர் வீதி, ஸ்ரான்லி வீதி, கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், பிரதான வீதி, கொன்வன்ற் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாது காப்பு வலயப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு ஆகிய இடங்களிலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி, மந்திகை, சாரையடி, தம்பசிட்டிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, பருத்தித்துறை நகரப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், யாழ் மாநகர சபைப்பகுதி, யாழ் பட்டணப்பகுதி ஸ்ரான்லி வீதி, கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், பிரதான வீதி, கொன்வன்ற் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்

08.10.2012 திங்கட்கிழமை, 10.10.2012 புதன்கிழமை மற்றும் 12.10.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான் ஆகிய இடங்களிலும்

08.10.2012 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படுத்தப்படும்

# மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தின் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நீர்வேலி திருமுருகன் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் யாழ். போதனாவைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சிகிச்சை வழங்குவதுடன் இலவசமாக மருந்துகளும் வழங்கப்படவுள்ளது. எனவே பொதுமக்கள் மருத்துவ முகாமில் பங்கு கொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.




இலங்கை - இந்திய நட்புறவு மன்றம், திடோரா நிறுவனம், திருமறைக்கலாமன்றம், வலிகாமம் கல்வி வலயம் என்பன இணைந்து நடாத்தும் மாற்று வலுவுள்ள மாணவர்களுக்கான 3 நாள் பயிற்சிப் பட்டறை நேற்று, யாழ்.பிரதான வீதியிலமைந்துள்ள கலைத்தூது கலா மண்டபத்தில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் வே. மகாலிங்கம், திடோரா நிறுவன பணிப்பாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பட்டறையில் கலந்து கொண்ட மாற்று வலுவுள்ள மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையும் காணலாம். (படங்கள்: ஆர்.ராஜகுமார்)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

### தமிழ்மொழியும் இலக்கியமும்

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான தமிழ்மொழியும் இலக்கியமும் வினாத்தாளுக்குரிய விடைகள்

#### பகுதி I

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | ii | (11) | ii | (21) | ii | (31) | i |
| (02) | iii | (12) | iii | (22) | ii | (32) | ii |
| (03) | i | (13) | iii | (23) | iii | (33) | ii |
| (04) | i | (14) | iii | (24) | i | (34) | iv |
| (05) | iv | (15) | i | (25) | iv | (35) | i |
| (06) | i | (16) | i | (26) | i | (36) | iv |
| (07) | ii | (17) | iv | (27) | ii | (37) | i |
| (08) | iii | (18) | iii | (28) | i | (38) | i |
| (09) | ii | (19) | ii | (29) | ii | (39) | ii |
| (10) | i | (20) | iii | (30) | iii | (40) | i |

#### பகுதி II

1) விண் + அரசர் + எல்லாரும் + வெள்கி + மனம் + சுளிக்க

ii) பாரதியால் குயில்பாட்டு எழுதப்பட்டது.
iii) அ) ஆக்கக்கூறுகளாகப் பிரித்து பொருள் அறியக்கூடியது பகுபதம் எனப்படும்.
ஆ) உண்டான் உண் + ட் + ஆன்
iv) சின்னஞ்சிறிய
v) உதாரணங்கள் எழுதல், கூறியது கூறல்.
vi) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். ஆசிரியர் பாடத்தைக் கற்பித்துள்ளார்.
vii) பெயரெச்சம் - நடிக்கும், நின்ற, ஓடும்
வினையெச்சம் - செய்து, படித்து, நடந்து
viii) கண்விடல், அடிப்பிறக்கிடல்
ix) வில், உடுக்கு, கடம், தாளம், கட்டை
x) தல், அல், அம், வை.

02) கட்டுரை பொருத்தமாக எழுதியிருப்பின் 25 புள்ளிகள் வழங்கவும்.
03) சுருக்கம் ஒரே பந்தியில் எழுதியும் பொருத்தமாக இருப்பினும் 10 புள்ளிகள் வழங்கவும்.
04) பாடலை வாசித்து பூரண வாக்கியத்தில் விடையளித்திருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.
05) கடிதம் அல்லது துண்டுப் பிரசுரம் என்பனவற்றில் ஏதாவது ஒன்றினை முறையாக எழுதியிருப்பின் 15 புள்ளிகள் வழங்கவும்.

#### பகுதி III

1) வீரசாமி செட்டியாரால் (சந்நியாசி - குடும்பப் பெண் / கசாப்புக் கடைக்காரன.)
ii) மகேசுவரியால், கம்பருக்கு கூறப்பட்டது.
iii) முன்னோரால் இயலாது போன விடயத்தை இனி வருகின்ற சமுதாயம் நிறைவேற்றும்.
iv) விடயப் புலமையின்றி வேறொன்றைக் குறை கூறாதே.
v) கோவை
vi) பயனுடைய சொல்லை சொல்ல வேண்டும். பயனில்லாத சொல்லை சொல்லாது விட்டு விடுக. ஆசிரியர் பாடத்தைக் கற்பித்தார்.
vii) பெண்ணின் கண் அழகை வியந்து கூறல்.
viii) தனிமனிதன் அல்லது சமுதாயத்தில் நிகழும் ஒரு பிரச்சினையைக் கூறல். குறைவான கதாபாத்திரம்.
ix) சமஸ்கிருதம், வங்காளம், தெலுங்கு, ஆங்கிலம்
x) ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்.

# க.பொ.த. (சாதாரணதர) அலகுரீதியான பாடத்திட்ட குறிப்புகள்

### சமனிலி

1) சமனிலியைத் தருக.
i) 1) 1 kg அரிசியின் ஆகக்குறைந்த விலை ரூ. 90.
(1 kg அரிசியின் விலை ரூ. x என்க)

ii) தகப்பனின் வயது A மகனின் வயது B

iii) ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களில் இருபது பேர் ஆவது கணிதத்தில் சித்தியடைய வேண்டும். சித்தியடைய வேண்டிய மாணவர் x என்க.

iv) பஸ் ஒன்றிலுள்ள இருக்கை x, y பிரயாணிகள் பயணம் செய்தனர். எல்லோரும் இருக்கையில் இருந்தனர்.

v) கப்பலில் ஏற்றக்கூடிய ஆகக்கூடிய நிறை PKg கப்பலில் ஏற்றிய நிறை Q

02) தீர்வுத் தொடையைத் தருக
1) $2x + 3 \geq 8$ (x முழு எண்)
2) $5 - 2x \leq 7$ (x முழு எண்)
3) $2x + 5 \geq 4x + 7$ (x முழு எண்)
4) $5 - \frac{2x}{3} \geq 7$ (x முழு எண்)

03) எண் கோட்டில் குறிக்க
(x நிறை எண்)
1) $2x - 1 \leq 3x + 2$
2) $5 - x \geq 2x - 4$
3) $2(3-2x) \geq 5 - 3x$

05) பின்வரும் சமனிலிக்கு ஏற்ற சமனிலி பெற்று
$x-2 < 3x - 4 < 2x + 1$ எண் கோட்டில் தருக.

### விகிதம் விகிதசமன்

1) பின்வரும் விகிதங்களை எளிய வடிவில் தருக.
1) 12:36 2) 15.75 3) $2 : \frac{1}{2}$ 4) $\frac{1}{2} : \frac{1}{3}$
5) 0.8 : 0.32 6) 0.25 :1

2) பின்வருவனவற்றுள் எளிய விகிதமாக எழுதுக
1) 25 cm : 1m 2) 500g : 2Kg
3) $350ml : \frac{1}{2} l$ 4) $\frac{1}{4}$ மணி : 30 நிமிடம்

03) பின்வருவனவற்றுக்கு 3 சமவலுப் பின்னம் தருக
1) 1 : 2 2) 2 : 5 3) 3 : 4 4) 2 : 7 5) 5: 8

04) A:B:C = 2 : 3:7 ஆக ரூ. 6000த்தைப் பிரிக்க.

05) புத்தகத்தின் விலை 2 : 5 ஆக உயர்ந்தது. ஆரம்ப விலை ரூபா 30 எனின் புதிய விலை என்ன?

06) கமலா : விமலா = 2 : 7 பிரித்தபோது விமலா ரூபா, 490 கிடைத்தால் கமலாவுக்கு கிடைத்த பணம் எவ்வளவு?

07) A : B = 1 : 2 B : C = 3: 1 ஆக ரூ. 5500 ஐ A,B,C இடையே பிரிக்க.

08) மாஜரீன் : சீனி : மா = 2 : 3 : 5 ஆக கலந்து பிஸ்கட் செய்யப்பட்டது. 80Kg பிஸ்கட் செய்ய ஒவ்வொன்றிலும் எத்தனை Kg தேவை.

09) கமலா : விமலா = 3 : 2 விமலா : பாமா = 5 : 1 ஆகப் பிரித்தபோது விமலாவுக்கு ரூ.750 கிடைத்தால் கமலா, பாமாவுக்கு கிடைத்த பணம் எவ்வளவு?

10) A என்பவன் ரூ.5000த்துடன் தொழிலை ஆரம்பித்தான். 4 மாதங்களின் பின் B என்பவன் ரூ.3000த்துடன் இணைந்தான். வருட முடிவில் ரூ.3500 வருமானத்தை பணம் கா்லத்துடன் பங்கிடுக.

11) A என்பவன் ரூ. 100000 த்துடன் தொழிலை ஆரம்பித்தான். 6 மாதங்களின் பின் B என்பவன் ரூ.6000த்துடன் சேர்ந்தான் 9 மாதங்களின் பின் C என்பவன் ரூ.4000த்துடன் சேர்ந்தான். வருட முடிவில் ரூ.6000 வருமானத்தைப் பணம் காலத்துடன் பங்கிடுக.

12) விலை அடிப்படையில் மா : சீனி = 2:5 பலகாரம் செய்வதற்கு மா : சீனி B 3:1 ஆக கலந்து பலகாரம் செய்யப்பட்டது. 1 Kg பலகாரம் ரூ. 27.50 எனின் 1 Kg சீனி 1 Kg மாவின் விலை என்ன?

### மெய் எண்கள்

1) விகிதமுறு எண்களைத் தெரிக.
1) 8 2) 0.6 3) 0.3 4) $\frac{22}{7}$
5) 3.1432.... 6) 0.73241 7) 0.45
8) 0.1732... 9) 1.732 10) $\sqrt{2}$
11) $\sqrt{9}$ 12) $\sqrt{12}$ 13) 0

2) சேடுகளைத் தெரிக

$8 , \sqrt{2} , \sqrt{4} , \sqrt{7} , \sqrt{9} , \sqrt{20} , \sqrt{44} , \sqrt{125}$

3) முழுச் சேடுகளைத் தெரிக.

$\sqrt{2}$ , $3\sqrt{2}$ , $5\sqrt{3}$ , $\sqrt{98}$ , $\sqrt{200}$

4) எளிய வடிவில் தருக.

$\sqrt{8}$ , $\sqrt{18}$ , $\sqrt{20}$ , $\sqrt{50}$ , $\sqrt{27}$, $\sqrt{80}$, $\sqrt{147}$, $\sqrt{180}$, $\sqrt{567}$

5) முழுச்சேடுகளாகத் தருக.

$2\sqrt{2}$ , $3\sqrt{3}$ , $5\sqrt{2}$ , $3\sqrt{5}$ , $10\sqrt{5}$ ,

6) சுருக்குக

1) $\sqrt{50} + \sqrt{32} - \sqrt{18}$

2) $\sqrt{108} - \sqrt{48} + \sqrt{75}$

3) $\sqrt{8} + \sqrt{32} + \sqrt{98} - \sqrt{200}$

4) $\sqrt{20} + \sqrt{43} + \sqrt{80} - \sqrt{125}$

7) சுருக்குக

1) $2\sqrt{45} - 3\sqrt{20} + 10\sqrt{5}$

2) $5\sqrt{8} - 2\sqrt{32} + 5\sqrt{98}$

3) $2\sqrt{28} - 3\sqrt{63} - 5\sqrt{175}$

4) $\frac{2}{\sqrt{2}} + 3\sqrt{2}$

5) $\frac{9}{\sqrt{3}} + \sqrt{3} - \frac{6}{3\sqrt{3}}$

6) $\frac{8}{\sqrt{2}} + 3\sqrt{2} - \sqrt{8}$

8) சுருக்குக

1) $\sqrt{2} \times \sqrt{3}$ 2) $\sqrt{10} \times \sqrt{50}$

3) $\sqrt{10} \times \sqrt{15}$ 4) $2\sqrt{10} \times \sqrt{15}$

5) $\sqrt{12} \times \sqrt{75}$ 6) $\sqrt{14} \times \sqrt{35}$

7) $\sqrt{12} \times \sqrt{20}$

9) சுருக்குக

1) $\sqrt{12} \div \sqrt{3}$ 2) $5\sqrt{15} \div 10\sqrt{75}$

3) $6\sqrt{10} \div 2\sqrt{15}$ 4) $\frac{3\sqrt{5}}{3\sqrt{98}} \div \frac{15}{\sqrt{245}}$

10) $\sqrt{2} = 1.414$ $\sqrt{3} = 1.732$ எனின் பெறுமானம் காண்க.

1) $\sqrt{50}$ 2) $\sqrt{200}$ 2) $\sqrt{27}$

4) $\sqrt{75}$ 5) $\frac{6}{\sqrt{3}}$ 6) $\frac{7}{\sqrt{2}}$

# விஞ்ஞானம்

1. ஒரு பொருள் அல்லது தொகுதிஅதன் .............................. அமைவில் இருந்து .............................. ஏற்படுத்தும் .............................. அசைவுகள் அதிர்வு எனப்படும்.


2. கண்ணால் காணக்கூடிய அதிர்வுகளுக்கு சிறந்த உதாரணங்களாக ஒலித்துக் கொண்டிருக்கும் ................., அதிரும் ..................... , .............................. ஆகியவற்றைக் கூறலாம்.

3. அதிரும் பொருள் ஒன்று ஆரம்ப அமைவிலிருந்து மேல்நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ அடைந்த .............................. வீச்சம் எனப்படும்.

4. அதிரும் ஒரு பொருள் ஒரு செக்கனில் ஏற்படுத்தும் ...................... எண்ணிக்கை .............................. எனப்படும்.

5. மீடிறனை அளக்கும் நியம அலகு .................................... ஆகும்.

6. ஒரு வாள் அலகு ஒரு செக்கனில் 30 தடவை அதிருமாயின் அதன் அதிர்வு மீடிறன் .............................. ஆகும்.


7. 

ஓர் அதிரி, திக்கொலி நாடாவில் முதற் குற்றை இடும்போது நிறுத்தற் கடிகாரம் இயங்க ஆரம்பித்து 201 ஆவது குற்றில் நிறுத்தற் கடிகாரம் 10 செக்கனைக் காட்டியது திக்கிடைகளின் எண்ணிக்கை ..............................

8. 10 செக்கனில் திக்கரின் அதிர்வுகளின் எண்ணிக்கை ..............................

9. ஒரு செக்கனில் திக்கரின் அதிர்வுகளின் எண்ணிக்கை ..............................

10. திக்கரின் அதிர்வெண் .............................................. Hz




முறுக்கற்ற இலேசான இழையில் ஒரு நுனியில் பாரமான சிறிய குண்டு கட்டப்பட்டு இழையின் மறுமுனை நிலையான ஒரு புள்ளியில் இணைக்கப்பட்டுள்ளது. இழை இறுக்கமாக இருக்கக்கூடியவாறு படத்தில் காட்டியவாறு அலையவிடப்படுகிறது.

11. வில் AB, AC நீளங்கள் சமனாகும் - சமனல்ல

12. ஊசலின் அலைவு வீச்சம் .............................. அல்லது .............................. ஆல் குறிக்கப்படும்.

13. வில் AB யின் நீளம் எப்பொழுதும் சமமாயிருக்கும் - சமமாயிருக்காது.

14. இவ் எளிய ஊசல் 5 செக்கனில் 30 அலைவுகளை ஏற்படுத்தியது ஆயின் அதன் அதிர்வெண் ..............................

15. ஊசலின் நீளத்தை அதிகரித்த பின் 5 செக்கனில் ஏற்படும் அலைவுகளின் எண்ணிக்கை கூடும் - குறையும்.

16. ஊசலின் நீளம் அதிகரித்த பின் அதன் மீடிறன் கூடும் - குறையும்.

17. அலையின் வேகம், அதிர்வெண், அலைநீளம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைத் தருக.

## அதிர்வும் சக்திப் பரிமாற்றமும்

1. அதிரும் பொருளில் ஏற்படும் சக்தி மாற்றம் அழுத்தசக்தி ⇌ .............................. ⇌ ..............................

2. ஒரு பொருளின் அதிர்வு காரணமாக அதே இயற்கை மீடிறனுடைய மற்றுமொரு பொருள் அதிருகின்ற தோற்றப்பாடு .............................. எனப்படும்.

**அலை இயக்கம்**

1. அலை செல்லும் திசைக்குச் செங்குத்தான திசையில் துணிக்கைகள் அதிர்வது போன்று தோன்றும் அலைகள் .............................. எனப்படும்.

2. அலை செல்லும் திசையிலேயே ஊடகத்திலுள்ள துணிக்கைகள் அதிருமாயின் அவ்வலைகள் .............................. எனப்படும்.

3. குறித்த ஒரு கணத்தில் தோன்றும் குறுக்கலையில் உயர்ந்துள்ள இடங்கள் .............................. எனவும், தாழ்ந்துள்ள இடங்கள் .............................. எனவும் கூறப்படும்.

4. குறுக்கலையொன்றில் அடுத்துவரும் இரண்டு .............................. தூரம் அல்லது அடுத்து வரும் இரண்டு .............................. தூரம் எனப்படும்.

5. நெட்டாங்கு அலையின் அடுத்துவரும் இரண்டு .............................. தூரம் அல்லது அடுத்து வரும் இரண்டு .............................. தூரம் .............................. எனப்படும்.

6. நீரிலேற்படும் அலைகளின் நடத்தையை அவதானிப்பதற்காக ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் உபகரணம் .............................. எனப்படும்.

7. ஒலி அலைகள் .............................. வகையைச் சேர்ந்தவையாகும்.

8. மனிதக் காதினால் கேட்கக்கூடிய ஒலி அலைகளின் மீடிறன் வீச்சு .............................. தொடக்கம் .............................. வரையானது.

9. வளியினூடாக ஒலி அலைகள் செல்லும் சராசரி வேகம்................ ஆகும்.

10. ஒலி அலையின் சுருதியானது அதன் .............................. இல் தங்கியுள்ளது.

11. சுருதியின் ஏறுவரிசை .............................. எனவும் இறங்கு வரிசை .............................. எனவும் கூறப்படும்.

**ஒளி**

1. ஒளி வெற்றிடத்தினூடாகவோ அல்லது வளியினூடாகவோ .............................. என்னும் வேகத்தில் செல்லும்.

2. ஒளியானது வெற்றிடத்தினூடாகவும், ஒளி ஊடுபுகும் ஊடகங்களினூடாகவும் செல்லக்கூடிய .............................. வகையைச் சேர்ந்த மின்காந்த அலை ஆகும்.

3. அலைநீளங்களின் வீச்சுக்கேற்ப ஒளியை முக்கிய .................... பிரிக்கலாம்.

4. கட்புலனாகும் ஒளி அலைகளின் வீச்சு .............................. எனப்படும்.

5. இயற்கையில் உருவாகும் கட்புலத் திருசியம் .............................. ஆகும்.

6. திரையொன்றில் பெறப்பட்ட திருசியத்தில் கூடுதலாக விலகும் ஒளி .............................. குறைவாக விலகும் ஒளி.

(தொடரும்.....)

# தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க மறுத்து கர்நாடகாவில் இன்று கதவடைப்பு


(பெங்களூரு)

தமிழகத்துக்கு தண்ணீர் விட எதிர்ப்புத் தெரிவித்து, கர்நாடகாவில் இன்று கதவடைப்புப் போராட்டம் நடைபெறும் என்று கன்னட அமைப்புகள் அறிவித்துள்ளன. இதே கோரிக்கையை வலியுறுத்தி, முன்னாள் முதல்வர் எடியூரப்பா, பெங்களூருவில் நேற்று ஏழு மணி நேரம் போராட்டம் நடத்தினார். இன்றைய போராட்டத்திற்கு விவசாயிகள் சங்கம், ராஜ்குமார் ரசிகர் மன்றம், சட்டத்தரணி சங்கம், லொறி உரிமையாளர்கள் சங்கம், அரசு ஊழியர்கள் சங்கம், கம்யூனிஸ்ட் கட்சி, கர்நாடக திரையுலகம் உட்பட பல்வேறு கன்னட அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இன்று காலை 6 மணியிலிருந்து, மாலை 6 மணி வரை போராட்டம் நடக்க இருக்கிறது.

கர்நாடகா அரசு தரப்பில் இதுதொடர்பாக எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

இருந்தாலும், பேருந்து போக்கு வரத்து சுமுகமாக இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. சனிக்கிழமை என்பதால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்படலாம். ஆனாலும், அதிகாரபூர்வமாக அந்தந்த துறையினர் அறிவிக்கவில்லை.

# கூடங்குளம் அணு உலைக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு



(புதுடில்லி)

கூடங்குளம் அணு உலை செயற்பட தடை விதிக்கக்கோரி உலகின் நண்பர்கள் என்ற அமைப்பு சார்பில் ஜி.சுந்தர்ராஜன் என்பவர் உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். அணுசக்தி ஒழுங்கு முறை வாரியம் சிபாரிசு செய்த 17 பாதுகாப்பு நடை முறைகளை மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டி இருந்தார்.

ஆனால், அணு உலையில் எரிபொருள் நிரப்புவதற்கு தடை விதிக்க உயர்நீதிமன்று மறுத்து விட்டது. இதனால், எரிபொருள் நிரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், நீதிபதிகள் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய குழு முன்பு, இம்மனு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பு சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் அணு உலைக்கு எதிராக வாதாடினார்.

# பாடசாலை மாணவர்களுக்கு விண்கலம் தயாரிப்புப் பயிற்சி


2025இல் இந்தியா விண்கலங்களை அனுப்புவதில் மிகப்பெரிய அளவிலான சாதனைகளைப் படைத்து முன்னிலை வகிக்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

ஆழ்வார்குறிச்சி - பரமகல்யாணி கல்லூரியில் விண்கலங்கள் அனுப்புவது பற்றிய சிறப்பு பயிற்சி பட்டறை நடந்தது.

இஸ்ரோ விஞ்ஞானிகள் மாணவர்களுக்கு விண்கலம் தயாரித்து அனுப்புவது, அனுப்பிய விண்கலங்கள் செயற்படும் முறைகள் உட்பட விண்கலம் பற்றிய சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தினர்.

வானில் விண்கலங்களைச் செலுத்துவதில் இந்தியாவின் பங்கு பற்றியும், கல்லூரி மாணவர்கள் விண்கலம் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வதிலும் உள்ள அனைத்து வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் பயிற்றுவித்தனர். மேலும் வரும் 2025இல் இந்தியா விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்புவதில் உலக அளவில் சாதனை படைத்து தலைநிமிர்ந்து நிற்கும் எனக் கூறினர்.

# "பிருத்வி-2" ஏவுகணை சோதனை வெற்றி



அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று, 350 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை தாக்கக் கூடிய, "பிருத்வி - 2" ஏவுகணை சோதனை நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஒரிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஏவுகணை தளத்திலிருந்து, இந்த ஏவுகணை நேற்று முன்தினம் காலை செலுத்தப்பட்டு, பரிசோதிக்கப்பட்டது. 9 மீ. நீளமும் 1 மீ. விட்டமும் கொண்ட இந்த ஏவுகணை, ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. 500 கிலோ எடை கொண்ட, அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது. இந்த குறுகிய தூர ஏவுகணையின் பரிசோதனைகள் ஏற்கனவே முடிந்து, இராணுவத்தில் சேர்க்கப்பட்டு விட்டாலும், இராணுவப் பயன்பாட்டில், இது எந்த அளவுக்கு உபயோகமாக இருக்கும் என்பதை உறுதி செய்யும் வகையில், இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இத்தகவலை, இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மத்திய அரசுக்கான ஆதரவை சிறிய கட்சிகள் விலக்க வேண்டும்

## மம்தா வேண்டுகோள்

காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் துறைகளில், நேரடி அன்னிய முதலீட்டை அனுமதித்ததன் மூலம், நேர்மையற்ற மற்றும் நெறிமுறைகளுக்கு மாறான முடிவை, மத்திய அரசு எடுத்துள்ளது. எனவே, ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள கட்சிகள், அமைச்சரவையில் இருந்து வெளியேற வேண்டும் என முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, பேஸ்புக் சமூகவலைத் தளத்தில், தன் வலைப் பக்கத்தில், மம்தா பானர்ஜி கூறியுள்ளதாவது; சமையல் காஸ் சிலிண்டர்கள் விநியோகத்தில், கட்டுப்பாடு விதிக்கும் முன், ஏழை மாணவர்களின் நலனைப் பற்றி, மத்திய அரசு கொஞ்சமும் கவலைப்படவில்லை. சமையல் காஸ் சிலிண்டர்களை சந்தை விலையில் பெற வேண்டும் எனில், அதிக விலை கொடுக்க வேண்டும். அதனால், பல நேரங்களில் மாணவர்கள் மதிய உணவைப் பெற முடியாமல் போகலாம். சீர்திருத்தம் என்ற பெயரில், சாதாரண மக்களைக் கொள்ளை அடிப்பது, தற்போது நடந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மையை மறைக்க, மத்திய அரசு பொய் மூடைகளை அவிழ்த்து விடுகிறது. வரக்கூடிய நாட்களில், மக்களைப் பாதிக்கக் கூடிய மேலும் பல முடிவுகளை எடுக்கவும், மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு எதிராக, என் ஆதரவாளர்கள் போராட வேண்டும். காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் துறையில், நேரடி அன்னிய முதலீட்டை அனுமதித்தன் மூலம், நேர்மையற்ற, நெறிமுறைகளுக்கு மாறான முடிவை, மத்திய அரசு எடுத்துள்ளது. எனவே, மன்மோகன் சிங் தலைமையிலான அரசிலிருந்து கூட்டணிக் கட்சிகள் வெளியேற வேண்டும்.

மத்தியில் ஆட்சியில் உள்ள சிறுபான்மை அரசுக்கு எதிராக, லோக்சபாவில், திரிணாமூல் காங்கிரஸ் கட்சி கொண்டு வர உள்ள, நம்பிக்கை இல்லா தீர்மானத்தை ஒருமித்த கருத்துடைய கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என்று மம்தா பானர்ஜி கூறியுள்ளார். மத்திய அரசில், தி.மு.க. மற்றும் சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் ஆகியவை இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



நவராத்திரி விழா விரைவில் கொண்டாடப்பட உள்ள நிலையில், கொலு சிற்பங்களின் விற்பனை இந்தியாவில் சூடுபிடித்துள்ளது.

# கருணாநிதி கறுப்புசட்டை போராட்டம்



(சென்னை)

தி.மு.க. சார்பில் கறுப்புசட்டை அணிந்து துண்டுப் பிரசுரம் செய்யும் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. தி.மு.க.தலைவர் கருணாநிதி சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் துண்டுப் பிரசுரத்தை வழங்கி போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். தி.முக. செயற்குழுக் கூட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகப்போக்கினைக் கண்டித்தும், மின்வெட்டினை கண்டித்தும், தி.மு.க. சார்பில் நேற்றய தினம் மனித சங்கிலி போராட்டம் நடக்கும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் நேற்று பேட்டியளித்த கருணாநிதி, பொலிஸார் அனுமதி வழங்காததால் கறுப்பு சட்டை போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது என்றார்.

# சொத்துக் குவிப்பு வழக்கில் மாயாவதிக்கு புதுச் சிக்கல்



(புதுடில்லி)

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து, உத்திரப்பிரதேச முன்னாள் முதல்வரும் பகுஜன் சமாஜ்வாதிக் கட்சியின்தலைவருமான, மாயாவதி, விடுவிக்கப் பட்டதை எதிர்த்து, உயர்நீதிமன்றில் மறு சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மீதான விசாரணை வரும், 9ஆம் திகதி நடைபெற உள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கிலிருந்து, உத்திரப்பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதியை உயர்நீதிமன்றம் கடந்த ஜூலையில் விடுவித்தது. இந்நிலையில், இந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோரி உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த, கமலேஷ் வர்மா என்பவர் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இம்மனு, நேற்று முன்தினம் நீதிபதிகள் சதாசிவம் மற்றும் தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய, உயர்நீதிமன்றக் குழு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மாயாவதிக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு தொழில் நுட்ப ரீதியில் வழங்கப்பட்டதே அன்றி சி.பி.ஐ. தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். இதையடுத்து மறு சீராய்வு மனு மீதான விசாரணையை நீதிபதிகள் வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# Asian Computer College (Pvt) Ltd

இல.174, உயதநகர் கிழக்கு, கிளிநொச்சி. T.P.021 4912982



## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

29.09.2012 சனிக்கிழமை அன்று எமது ASIAN கணினிக்கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும முகமாக பிரதம விருந்தினராக திரு.பங்கயச் செல்வன், திரு.சுதர்சன், திருமதி தனபாலசிங்கம், திருமதி சிவச்சந்திரன், திருமதி ஜெயராஜ், திருமதி லோகநாகேஸ்வரன், திரு. சுதன், திரு. நகுலன், திரு. நிரஞ்சன் ஆகியோர் வருகைதந்து சிறப்பித்ததோடு மேலும் அன்றைய தினத்தில் 100க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி மாணவர்களைக் கௌரவித்துள்ளனர். அத்தோடு அன்றைய தினத்தில் மாணவர்கள் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி அந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் Asian கணினிக் கல்லூரி முதல் நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## கணினி சம்பந்தமான கருத்தரங்குகளை Asian கணினி கல்லூரியினால் பின்வரும் பாடசாலைகளில் நடாத்தப்பட்டது



குறிப்பு:-A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான Accounting Packages மற்றும் Banking Course மற்றும் AutoCAD2D&3D ஆகிய பாடநெறிகள் எமது கல்லூரியில் நடைபெற்று வருகின்றன. எனவே புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் எமது கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.



திரு. அ.பங்கயற்செல்வன் [கிளி. மகாவித்தியாலயஅதிபர்] 17.08.2012 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
Asian computer college,
Kilinochchi
நிர்வாகி
தனேஸ்வரன் (லால்)
T.P 0774495250



கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி



கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்



கிளி/குமரபுரம் இந்துமகா வித்தியாலயம்



கிளி/பாரதிபுரம் வித்தியாலயம்



கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்



கிளி/விவேகானந்தா வித்தியாலயம்



சுகாதாரப் பணியாளர்களுக்கான கருத்தரங்கு



சிறப்பு விருந்தினர்கள்



திரு.அ. பங்கயற்செல்வன். (கிளி/மகாவித்தியாலய அதிபர்)



திருமதி. லோகநாகேஸ்வரன் ஜெயராணி. பாரதிபுர வித்தியாலய பிரதிஅதிபர்



திருமதி. தனபாலசிங்கம் ஜெயந்தி. கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிஅதிபர்



திருமதிஜெயராஜ் கிளி/மத்திய கல்லூரி பிரதிஅதிபர்



திரு.நகுலன் NEC கல்வி நிலையம் (நிர்வாகி)



திரு.சுதன் ஸ்மைல் கல்வி நிலையம் (நிர்வாகி)



கிளி/விவேகானந்தா வித்தியாலய ஆசிரியர்



Asian கணினி கல்லூரி வடபிராந்திய முகாமையாளர் திரு. ராயசிங்கம். சுதாகரன்.



திருமதி. சிவச்சந்திரன் திருச்செல்வி. கிளி/இராமநாதன் சர்வோதய பாடசாலை அதிபர்

மாணவர்களின் நிகழ்ச்சி



கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவி



கிளி/ விவேகானந்தா வித்தியாலய மாணவி



கிளி/ பாரதிபுரம் மகாவித்தியாலய மாணவன்





கிளி/ இந்து ஆரம்ப வித்தியாலய மாணவிகள்

# விதிமுறை தவறிய வர்த்தகர்கள்; கிளிநொச்சியில் முற்றுகை

வயது குறைந்தவர்களுக்கு சிகரெட், பீடி மற்றும் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்த 23 வர்த்தகர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சிப் பிரதேச எல்லைக்குள் வியாபார நிலையங்களை நடத்திவரும் மேற்படி வர்த்தகர்களே வயது குறைந்தவர்களுக்கான சிகரெட், புகையிலைப் பொருட்களை விற்ற நிலையில் மதுவரித் திணைக்கள அதிகாரி களினால் பிடிக்கப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றைய தினம் குறித்த 23 வர்த்தகர்களும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டவேளை இவர்கள் அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் ஒவ்வொருவருக்கும் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 57 ஆயிரத்து 500 ரூபாவினைச் செலுத்துமாறு நீதவான் எம்.ஐ. வகாப்தீன் உத்தரவிட்டார்.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் வைத்து அரச சாராயத்தை விற்பனை செய்து வந்த ஒருவரை மூன்றாவது தடவையாகவும் பளைப் பொலிஸார் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 750 மில்லி லீற்றர் சாராயத்தையும் கைப்பற்றியுள்ளனர். இவர் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகிய வேளை 20 ஆயிரம் தண்டத்துடன் ஒரு மாத கட்டாயச் சிறைத் தண்டனையை நீதவான் விதித்தார். இதேபோன்று கிளிநொச்சியில் ஜெயந்தி நகரில் ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (கே)




வவுனியா தெற்கு வலயத்தால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் சர்வதேச உளநல தினத்தின் முன்னோடி நிகழ்வுகளான பாடசாலை மட்டக் கருத்தரங்குச் செயற்றிட்டத்தின்போது வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வைத்தியகலாநிதி சுதாகரனின் கருத்தரங்கின்போது, ஆசிரியை விளக்கமளிப்பதையும், கலந்து கொண்ட மாணவிகளையும் காணலாம். (160)

# அபிவிருத்தியில் பங்கு



(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினரும், யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளில் பங்கு கொண்டுள்ளனர்.

இராணுவ வீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை விடுதி மற்றும் பற்சிகிச்சை நிலையம் என்பவற்றைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கண் சிகிச்சை விடுதியினை இராணுவத்தினரின் சுமார் மூன்று இலட்சம் ரூபா. நிதி செலவில் புனரமைக்கவும் பற்சிகிச்சை நிலைய்ததை வர்ணப்பூச்சு பூசி புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான மனிதவளம் இராணுவத்தினரிடம் இருப்பதன் காரணமாக அதனைப் பயன்படுத்தியே இந்தப் புனரமைப்பு வேலைகள் நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பற்சிகிச்சை நிலையத்திற்கான வர்ணப்பூச்சு வேலைக்கான வர்ணப் பூச்சுக்கள் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா தெரிவித்துள்ளார்.



வலி.தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிய நூல்களின் கண்காட்சி இடம்பெற்று வருகின்றது. இதனைப் பெருமளவான பொதுமக்களும், மாணவர்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

## நோர்வே...

தமாக நலன்புரி நிலையங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என இலங்கைக்கான நோர்வேத் தூதரகப் பேச்சாளர் மார்டா லியா டொர்க்ஸ்நேஸ் தெரிவித்துள்ளார். நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர் சிறுமியரின் உறவினர்கள் கொழும்பில் அமைந்துள்ள நோர்வேத் தூதரகத்திற்கு அருகாமையில் அமைதியான போராட்டமொன்றை நடத்தியுள்ளனர். சிறுவர்களின் நலன், உரிமைகள் போன்றவற்றுக்கு நோர்வேயில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் சிறுமியரின் தேவைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பங்களில் நலன்புரி நிலையங்களின் ஊடாக சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முனைப்புக் காட்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறுவர் சிறுமியரின் இனம், நாடு, குடியுரிமை போன்ற காரணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படமாட்டாது எனவும், சிறுவர் உரிமைகள் சகலருக்கும் சமமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் நலன் குறித்து நோர்வேச் சிறுவர் நலன்புரி அமைப்பிற்கும் தமிழ் அமைப்புக்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. சிறுவர் நலன்புரி நிலையத்தின் தனித்துவமான கண்காணிப்பு நடவடிக்கைகளின் பின்னர் நீதிமன்ற உத்தரவிற்கு அமையவே சிறுவர் சிறுமியர் நலன்புரி நிலையங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் நீதிமன்றமும், சிறுவர் நலன்புரி நிலையங்களும் சிறுவர் சிறுமியரின் கருத்துக்கு கூடுதல் முக்கியத்தும் அளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கோரவிபத்து...

மற்றும் வேலாயுதம் செந்தில்குமார் மற்றும் மினிபஸ் ஸில் பயணித்த 16 வயதுடைய சிறுவனும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மினி பஸ்ஸின் நடத்துநரான க.திவாகரன் (வயது-19) மற்றும் துசார, குமார்சர்மா (வயது-29), கொழும்பு நலந்த ஜெயந்தகுமார (வயது-35), வல்வெட்டித்துறை ரவீந்திரகுமார் தயாளினி (வயது-26), சந்நிதி வீதி, தொண்டைமானாறு, தவக்குமார் நாகேஸ்வரி (வயது-36), சந்நிதி வீதி, தொண்டைமானாறு ஆகியோர் உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்தில் மரணமடைந்த 16 வயதுச் சிறுவன் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் ஏற்கனவே ஸ்தலத்தில் இறந்தவரான வேலாயுதம் செந்தில்குமார் குறித்தும் மேலதிக தகவல் எதுவும் வெளியாகவில்லை.

குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த குறித்த மினிபஸ் தங்காலையில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த பயணிகள் பேருந்து யாழ்.நகரில் பயணிகளை இறக்கிவிட்டு பருத்தித்துறை வீதி வழியாக வடமராட்சி நோக்கிப் பயணித்தபோது இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலின் முன் பாக இந்த விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தின்போது முன்னால் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தை முந்திச் செல்வதற்காக குறித்த மினிபஸ் வீதியின் வளைந்த பகுதி ஒன்றில் முந்த முயற்சித்த வேளை எதிரே வந்த குறித்த பயணிகள் பேருந்துடன் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது. (பா, இ, 137)

## முற்றுகிறது...

கேற்றைப் புதிய பூட்டுப் போட்டு பூட்டி வைத்திருப்பதாகத் தவிசாளர் குறிப்பிட்டார்.

இக்காணிக்குள் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான முன்னேற்பாடுகளாக பூங்கன்றுகளும், பூச்சாடிகளும் வைக்கப்பட்டிருந்தன. சில தினங்களுக்கு முன்னர் இக்காணி இராணுவத்துக்கே உரியது எனவும், பிரதேச சபை தனக்கே சொந்தம் என்றும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பரஸ்பரம் முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தனர். இக்காணிக்குள் நாட்டப்பட்டிருந்த நல்லூர் பிரதேசசபைக்கான சிறுவர் பூங்கா என்னும் அறிவித்தல் பலகையும் சில தினங்களுக்குள் முன்னர் காணாமல் போயிருந்தது.

நேற்று நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக பிரதேச சபையின் தவிசாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற போது யாழ்.மாவட்ட அரச அதிபரினால் இக்காணி இராணுவத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்தாகவும், அரச அதிபரினால் அப்படிக் கூறப்படவில் லையாயின் மீண்டும் பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸ் நிலைய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அரச அதிபருக்கு அறிவித்துள்ளதாக தவிசாளர் ப.வசந்தகுமார் குறிப்பிட்டார். (137)

## காணாமல்...

இந்த விடயம் குறித்து இலங்கைக்கு விஜயம் செய்த மனித உரிமைப் பேரவை உறுப்பினர்களும் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இருப்பினும் இலங்கை அரசு இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது தொடர்ச்சியான மௌனத்தையே கடைப்பிடிப்பதாகவும் அந்தக் கடித்த்தில் நவநீதம் பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார்.

# இலங்கை, மேற்கு இந்திய அணிகள் இறுதி ஆட்டத்துக்கு தயார்



எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறவுள்ள இருபதுக்கு இருபது உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணியைச் சந்திக்கும் வாய்ப்பை மேற்கிந்திய தீவுகள் பெற்றுக் கொண்டது.

ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலிய அணியை 74 ஓட்டங்களால் வெற்றி கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை பெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்ரேலிய அணி 206 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப விக்கெட்கள் மளமளவெனச் சரிந்தன. டேவிட் வோனர் 1, வொட்சன் 7, மைக் ஹஸி 18, வைட் 5, டேவிட் ஹஸி 0, மெத்திவ் வேட் 1 என ஆஸி வீரர்கள் தொடர்ச்சியாக சரிந்தனர்.

அவுஸ்ரேலிய அணித் தலைவர் ஜோர்ஜ் பெயிலி 63 ஓட்டங்கள் பெற்று அரைச்சதம் கடந்து அவுஸ்ரேலிய ரசிகர்களுக்கு சற்று மகிழ்ச்சி அளித்தார். வேறு எவரும் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு பிரகாசிக்கவில்லை.

இறுதியில் அவுஸ்ரேலிய அணி 16.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவிக் கொண்டது. இதன்படி இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை மேற்கிந்திய தீவுகள் அணி பெற்றுக் கொண்டது. போட்டியின் நாயகனாக கிரிஸ் கெயில் தெரிவு செய்யப்பட்டார்.

## திவிநெகும...

இந்தத் திட்டத்தின் மூலம் கிராம சமூகக் கட்டமைப்பை வலுப்படுத்த முடியும். அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறுக்க முடியும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பத்தரமுல்லவில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை...

ந்துள்ளது. இந்தநிலையில், இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆசிய நாடுகள் வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளவேண்டும் எனவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி கோரிக்கை விடுத்துள்ளார்.

# மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு நிரந்தர விளையாட்டு மைதானம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கென நிரந்தர மைதானம் இவ்வாண்டு இறுதிக்குள் பெற்றுத்தரப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத் தொகுதியை நேற்று திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பாடசாலையின் பௌதீக வளங்களின் தேவைகள், தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் இப்பாடசாலையின் பழைய மாணவனும், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் விருப்பத்திற்கு இணங்கவும், பாட ாலைத் தேவையைக் கருத்தில் கொண்டும், இவ்வாண்டு இறுதிக்குள நிரந்தர மைதானமொன்று நிச்சயம் பெற்றுத்தரப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

இதனிடையே ஏனைய தேவைகள் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை, ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் இப்பாடசாலையும் உள்வாங்கப்பட்டு ஏனைய தேவைகள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு துறைசார்ந்தோருடாக முழுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அந்த வகையில் பாடசாலைச் சமூகத்தினர் நம்பிக்கை வீண்போகாத வகையில் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளுக்கு முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

முன்பதாக நிகழ்வின் பிரதம விருந்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட ஏனைய அதிதிகள் மாணவர்களின் இசை



அணிவகுப்புடன் பிரதானவாயிலிலிருந்து அழைத்து வரப்பட்டதை அடுத்து பாடசாலையின் நிறுவுநர் வீரசிங்கம் நினைவிடத்திற்கு அமைச்சர் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டு ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து புதிய கட்டடத்தை அமைச்சர் திறந்து வைக்க நினைவுக் கல்லை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் திறந்து வைத்ததுடன் தொடர்ந்து பெயர்ப்பலகை திரைநீக்கமும் செய்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உரைநிகழ்த்தினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக கேட்போர்கூடம் மற்றும் வகுப்பறைகள் உள்ளடங்கிய கல்லூரிக்கான இப்புதிய கட்டடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் அலெக்ஸ்சான்டர் சாள்ஸ், யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

## இலஞ்சம் வாங்கிய பிரதி மேயர் கைது

(கொழும்பு)

ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில தமபுள்ளை மாநகர சபையின் பிரதி மேயர் (ஐ.ம.சு.கூ) இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் அவரிடம் தற்போது விசாரணையை மேற்கொண்டுள்ளனர்: இவர் இலஞ்சம் வாங்கியதற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உயர்கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி பூரணமாக பயன்படுத்தப்படுவதில்லை

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியில் பாரிய தொகை பயன்படுத்தப்படுவதில்லை என உயர்கல்விப் பிரதி அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய வரவு - செலவுத் திட்டத்திற்கு மேலாக வேறு வழிகளிலும் நிதி கிடைக்கப்பெறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கண்டி - மஹாமாயா கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதேவேளை, இந்த நாட்டில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதிபோன்று பாரிய தொகை வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படுவதில்லை என அமைச்சர் லக்ஷ்மன் சென்விரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவில சிவில் பாதுகாப்பு குழுவின் மாபெரும் பொதுக்கூட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.மல்கம் பிலேட் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா கலந்துகொள்வார்.

இக்கூட்டத்திற்கு பிரதேச செயலாளர் பிரிவு சிவில் பாதுகாப்புக் குழு, கிராமிய சிவில் பாதுகாப்பு குழு, மானிப்பாய் வர்த்தக சங்கம், சங்கானை வர்த்தக சங்கம், மானிப்பாய் முச்சக்கர வண்டிச் சாரதி சங்கம், சங்கானை முச்சக்கர வண்டி சாரதிச் சங்கம் ஆகியோரை பங்குபற்றுமாறு பொலிஸ் அதிகாரி அறிவித்துள்ளார். (104)

## திங்கள் ஓய்வூதியம்

(ஆனைக்கோட்டை)

அரச ஓய்வூதியர்களின் இம்மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான வவுச்சர்கள் உரியவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாதத்திற்கான கொடுப்பனவு 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (104)

## சர்வதேச ஆசிரியர்தின நிகழ்வுகள்

(ஜெயபுரம்)


ஜெயபுரம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை மேற்படி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மிக விமர்சையாக இடம பெறவுள்ளது. அதிபர் நா.நடேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வின் போது கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (149)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வி.கிருஷ்ணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சுகுணமாறன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (01)

# வங்கிக் கொள்ளைகள் விமான நிலையத்திலேயே முறியடிப்பு



(கொழும்பு)

வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டக்கூடிய இயந்திரம், மடிகணினி மற்றும் கடனட்டைகள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் காந்த அட்டைகள் 110 ஆகியவற்றுடன் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்த இளைஞர் ஒருவரை விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட 26 வயதான மேற்படி இளைஞன் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இவர் சென்னையிலிருந்து இலங்கை வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டார் என்றும் விமான நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக மேற்படி அதிகாரிகள் மேலும் கூறினர்.

# கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கும், சுற்றுப்புறம் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான கேள்வி அறிவித்தல்**

யாழ். மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசலகூடங்களையும், சுற்றுப்புறம் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான கேள்விகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. 09.10.2012 ஆம் திகதியிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதுடன், இது தொடர்பான மேலதிக தகவல்களை செயலக நிர்வாகக் கிளையில் உதவி மாவட்ட செயலாளர் (தொலைபேசி இல. 0212222771) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்பட்டாத வைப்புப் பணமாக ரூபா 100 உம் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000 உம் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில யாழ்ப்பாண மாவட்ட செயலக மலசல கூடங்களைத் துப்புரவு செய்தலுக்கும், சுற்றுப்புறம் மற்றும் கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால் என்பவற்றைத் துப்புரவு செய்தலுக்குமான விலைக் கேள்விகள் எனக் குறிப்பிட்டு** 19.10.2012 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாக செயலக நிர்வாகக் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/1738)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.